உ

சிவமயம்

# பறாளை விநாயகர் பள்ளு



நல்லூர்

**வி. சின்னத்தம்பி புலவர்**

இயற்றியவர்

வெளியீடு - 6

அருள்மிகு பறாளை
ஈசுர விநாயகர் திருக்கோவில்
அறங்காவலர் சபை

Dr. B. Kailayanathan

# பறாளை விநாயகர் பள்ளு








நல்லூர்

**வி. சின்னத்தம்பி புலவர்**

இயற்றியவர்



வெளியீடு - 6

அருள்மிகு பறாளை
ஈசுர விநாயகர் திருக்கோவில்
அறங்காவலர் சபை

உ
சிவமயம்



# கும்பாபிஷேக மகோற்சவம்

சிவ புண்ணியச் செல்வர்காள்

இற்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன் எனது முன்னோரால் கட்டப்பட்ட திருப்பணியை இப்போ என் சொந்தப் பொறுப்பில் வைரக்கல்லால் திருப்பணி செய்யப்பட்டு பறாளையிலெழுந்தருளியிருக்கும் ஈசுர விநாயகருக்கு நிகழும் இராட்ஷஸ ஸ்ரீ வைகாசி மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை வரும் இடபலக்கின சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகஞ் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் சிவநேயச் செல்வர்களனைவோரும் வந்து தெரிசித்துத் தங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைப் பெற்றுத் தங்களாலியன்ற தருமங்களைச் செய்து செல்லுமாறு கேட்கிறேன்.

இங்ஙனம்
வயிரமுத்து ஆறுமுகம் (வைத்தியர்)
ஆதீனகர்த்தரும் மானேஜரும்.

சுழிபுரம்
வைகாசி. மீ

*(மறுபதிப்பு)*

நூல் : பறாளை விநாயகர் பள்ளு

ஆசிரியர் : நல்லூர் வி. சின்னத்தம்பி புலவர்

வெளியீடு : அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர்
கோவில் அறங்காவலர் சபை,
சுழிபுரம்

பதிப்பு : 1998

உரிமை : பறாளை ஈசுரவிநாயகர் கோவில்
அறக்கட்டளை

விலை : ரூபா 35/=

அச்சகம் : உதயன் பதிப்பகம்,
39, அருணகிரி வீதி,
திருக்கோணமலை.
☎ 026 - 20783

## இந்துசமய கலாசார பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலங்களில் பறாளை அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோயிலும் ஒன்று. 16ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற இவ்வாலயம், 17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரால் இடிக்க முனைந்த போது இறைவனருளால் சேதம் எதுவுமின்றி ஆலயம் பாதுகாக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் நல்லூர் வில்வராஜா முதலியாரின் மகனும், ஆற்றல்மிக்க அறிஞருமாகிய சின்னத்தம்பி புலவர் ஆலயத்தில் உள்ள இறைவனைப் போற்றி, அவரை பாட்டுடைத் தலைவராக்கி "பறாளை விநாயகர் பள்ளு" என்ற பிரபந்தத்தை பாடி அருளினார்.

கருத்தாழமும், சுவையானதுமான பாடல்கள் நிறைந்த பள்ளு இலக்கியமாக கருதப்படும் பறாளை விநாயகர் பள்ளு பாடசாலைகளிலும் போதிக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் வெவ்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றிய போதும் பள்ளு இலக்கியத்தின் பெருமையையும், சிறப்பையும் நன்கு உணர்ந்து அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோவில் அறங்காவலர் சபையினர் மீண்டும் இந்நூலை பதிப்பித்து வெளியிடுவது வரவேற்புக்கும், பாராட்டுக்கும் உடைய நன்நிகழ்ச்சியாகும்.

அவர்களது முயற்சி வெற்றி பெறவும், பழைய நூல்கள் மீண்டும் புதிய பதிப்புக்களாக உருப்பெற்று உள்ளத்தை பண்படுத்தவும், படிப்பவரை பரவசத்தில் ஆழ்த்தவும், நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**சி.தில்லை நடராஜா**
பணிப்பாளர்
இந்துசமய கலாசார திணைக்களம்

## அணிந்துரை

பள்ளுப்பாவினைப் பாடிப் பண்டைத்தமிழ் வளர்ப்போம். தெள்ளு தமிழால் ஈசுர விநாயகன் புகழைச் சின்னத்தம்பிப் புலவர் தேன் தமிழ் இனிமை சொட்டும்படி பாடியுள்ளார். வரலாற்றுப் புகழ் மிக்க ஈசுர விநாயகர் ஆலயத்தினை பெரிய பரிகாரியார் பிரபு வை. ஆறுமுகம் கட்டுவித்து 1915ல் குடமுழுக்குச் செய்தார். பெரியபரிகாரியார் தமிழுக்கு பெருமையையும் இலங்கைக்குப் புகழையும் தேடித்தந்தவர். சைவத்தையும் தமிழையும் வளர்த்துச் சுழிபுரத்தின் மதிப்பை உயாத்திய பெருங்கோமான். தமிழர்கள் வயற்செய்கையை களைப்பின்றியும் உற்சாகத்தோடும் செய்வதற்காக கமவேலை செய்யும் போது பெண்களால் பாடப்பட்டு வந்தவை பள்ளுப் பாடல்கள் ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இலங்கையில் எழுந்த மிகச் சிறந்த இலக்கியமாக கருதப்படுகின்ற பறாளை விநாயகர் பள்ளு நூலினை பறாளை விநாயகர் கோவில் அறங்காவலர் சபை பதிப்பித்து வெளியிடுவதனை நாம் வரவேற்றுப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஆசாரத்துடன் விநாயகனை வழிபட்டும், விநாயகர் பள்ளினைப் படித்தும் அவன் அருட் கடாட்சத்தினை பெறுவோமாக.

"நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

**வைத்தியாச்சாரிணி.பா.இராதாதேவி**
கௌரவ செயலாளர்
பெரிய பரிகாரியார் சித்த வைத்திய சங்கம்
சுழிபுரம்.

23.12.1997

# பதிப்புரை

**வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்**

ஈழத்துச் சிறப்பு மிக்க பள்ளு இலக்கியங்களில் ஒன்றாகிய பறாளை விநாயகர் பள்ளு இன்று பெற்றுக் கொள்ளமுடியாமல் இருப்பதனால் அதனைப் பதிப்பித்து வெளியிடுமாறு அடியார்கள் ஆலய அறங்காவலர் சபையை வேண்டிக் கொண்டார்கள். சின்னத்தம்பி புலவரின் புலமை நயமிக்க பள்ளு மறைந்து விடாமல் இருப்பதற்காகவும், பிள்ளையார் பெருமை எதிர்கால சந்ததியினருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும் அறங்காவலர் சபை பறாளை விநாயகர் பள்ளு இலக்கியத்தினை பதிப்பித்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றது. இத் திருக்கோயில் இலங்கையின் வடபால் யாழ் நகரிலிருந்து செல்லும் பிரதான வீதியில் பத்து மைல், தொலைவில் சுழிபுரம் என்ற பேரூரில் வயல் நடுவே அமைந்துள்ளது.

சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டு குல சேகர முதலியாருக்கு வழங்கிய பள்ளு ஏட்டுப் பிரதி சந்ததி வழியாக அறங்காவலர் சபை தலைவராக இருந்த வைத்தியசிரோமணி வ.த. முதலியாருக்கு கிடைக்கப் பெற்றது. அவருடைய ஏட்டிலிருந்து பிரதி பண்ணப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஈசுர விநாயகர் அற்புதங்கள் நிறைந்தவராக எழுந்தருளியுள்ளார். கடந்த சில வருடங்களாக நிலவி வரும் போர்ச் சூழலிலும் விநாயகர் திருவருளினால் பூசைக்கருமங்களும், திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பது நெஞ்சை நெகிழ வைக்கின்றது.

எல்லோரும் ஈசுரவிநாயகனை வணங்கி வழிபட்டு அருள் பெற வேண்டும். யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும். மூர்த்தியின் கீர்த்திகளை யாவரும் அறிந்து நலம் பெற வேண்டும். ஒரு காலத்தில் பறாளை விநாயகர் பள்ளு பாடல்கள் கல்லூரிகளில் பாடநூலில் ஒரு பகுதியாக அமைந்த சிறப்புடையது. ஆனைமுகனுக்கு சொந்தமான பள்ளு ஆலய அறக்

கட்டளைக்கு உரித்தானது. அதனை எல்லோரும் படித்தும் பாடியும் பயன் பெற வேண்டி அறங்காவலர் சபை வெளியிடுகின்றது. மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

## செலவு விபரம்

அறங்காவலர் சபை 1994,95,96,97ம் ஆண்டுகளில் சொந்தப்பணமாக ரூபா அறுபத்திமூவாயிரம் ஆலய பராமரிப்புக்காக செலவு செய்துள்ளது.

**வித்தக விநாயகன் விரை கழல் சரணே**

***அறங்காவலர் சபை***

திரு. செ. மயில்வாகனம் - தலைவர்
திரு. சு. இராசசேகரம் - துணைத் தலைவர்
திரு. பூ. பத்மநாதன் - துணைத் தலைவர்
வைத்திய கலாநதி
பூ. கைலாயநாதன் - பெரும் பொருளாளர்
வைத்திய பேரறிஞர்
க. பாலசுப்பிரமணியம் - செயலாளர்
திரு. பூ. வைத்தியநாதன் - துணைச் செயலாளர்
திரு. அ. சிவகாந்தா - பொருளாளர்
வைத்தியாச்சாரி
பூ. நாகநாதன் - அங்கத்தவர்
திரு. அ. சிவச்சந்திரன் - அங்கத்தவர்
திரு. க. நடேந்திரா - அங்கத்தவர்
திரு. பா. சாந்திக்குமார் - அங்கத்தவர்
திரு. பா. சிவானந்தா - அங்கத்தவர்
திரு. பா. ஆனந்தகுமார் - அங்கத்தவர்
திரு. பா. இந்திரகுமார் - அங்கத்தவர்
திரு. பா. உருத்திரகுமார் - அங்கத்தவர்
திரு. பா. சூரியகுமார் - அங்கத்தவர்

அறங்காவலர் சபை
அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர்
திருக்கோவில்
பதிவு இல. 7839/JA/111

வெளிநாடுகளில் வசிக்கும் அறங்காவலர்கள் சார்பில் திரு.நா.இராமநாதன், திரு.ப.மனோகரன், திரு.வை. மனோரஞ்சன், திரு.சி.பாலகிருஷ்ணன், திரு.து.சிறிதிருக்கேதீஸ்வரராஜ் உறுப்பினர்களாக உள்ளனர்.

## அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோவில் மூர்த்தியின் கீர்த்தி

ஈழமண்டல மணித்திருநாட்டின் வடபாகம் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலே நாகநாடு என அழைக்கப்பட்டது. நாகரிகத்தை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாகநாட்டின் தமிழர்களே. முதற்சங்க காலத்திற்கு முன்பிருந்தே நாகநாடு மணி பல்லவம் என்ற பெயரால் விளங்கியது. மணிநாகபுரம் மணிபல்லவத்தின் தலைநகராக அமைந்திருந்தது. மணிபல்லவ ராச்சியத்தையும் மணிநாகபுரத்தையும் வடநாட்டு மூவேந்தர்கள் தாக்கியும் அழித்தும் வரலானார்கள். கி.பி ஆறாம் நூற்றாண்டளவில் தென்னிந்தியா மூன்று நூற்றாண்டுகள் பல்லவமன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம் பல்லவர் காலம் ஆகும். பல்லவ அரசர்கள் மலயநாடு கம்போடியா போன்ற கீழைத்தேய நாடுகளையும் ஆட்சி செய்தார்கள் என கல்வெட்டுக்களினால் அறிய முடிகின்றது. பல்லவர்களின் ஆலயங்களின் அமைப்பே தனிச் சிறப்பாகும். பெருந்தொகையான ஆலயங்களை சிற்பச் சிறப்புக்களுடன் இலங்கை இந்தியா கீழைத்தேய நாடுகளில் பல்லவ மன்னர்களால் கட்டப்பெற்றன.

பத்தாம் நூற்றாண்டில் மணிபல்லவத்தைக் கைப்பற்றி சோழமண்டலத்துடன் இணைத்து சோழியபுரம் என பெயரிட்டு சோழர் ஆண்டு வந்தார்கள். ஆனால் இராசசேகர ராசாக்கள் மணிபல்லவத்தை மீட்டு மீண்டும் ஆட்சி செய்தனர். பரராசசேகரன் 16ஆம் நூற்றாண்டில் நல்லூரில் பேரரசனாக விளங்கியவன். இவனுக்கு பட்டத்துராணி வயிற்றில் பண்டாரமும், கதிர்காமசேகரனும், காமக்கிழத்திக்கு சங்கிலியும் பிறந்தார்கள. சங்கிலி தமக்கு அரசுரிமை கிடைக்கப் போவதில்லை என்றபடியால் சதி செய்து அரசைக் கைப்பற்ற எண்ணினான். பிறப்பைப் போலவே சிந்தனைகளும் ஏற்படுகின்றன. பண்டாரம் மர்மமாக கொலை செய்யப்பட்டதால் கதிர்காமசேகரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. வன்னியில் கலகம் விளைவித்த சிற்றரசர்களை அடக்குவதற்காக கதிர்காமசேகரன் பரராசசேகரனால் அனுப்பி வைக்கப்பட்டான். தந்தையை சிறையிலிட்டு முடியும் செங்கோலும் இன்றி சங்கிலி சிம்மாசனம் ஏறினான். வெற்றியுடன் மீண்ட கதிர்காமசேகரன் பழைய இராசதானியாகிய சோழிய புரத்திற்கு சென்று வீமராசன் கொல்லை என்ற நந்தவனத்தில் வாழ்ந்து வந்தான்.

வடக்கே இராவணேசுவரனால் கட்டப்பட்ட சம்பேசுவரம் என்கிற சிவாலயம் அழிவுற்று காணப்படுகிறது. தெற்கே பொன்னாலையில் திருமால் கோவில் அமைந்துள்ளது. மேற்கே இந்திரனுக்கு சாபம் நீங்கிய திருவடிநிலை தீர்த்தச் சிறப்பாக உள்ளது. கிழக்கே சோலைகளும், கனிகளும், குளங்களும், வயல்களும் நிரம்பிய சுழிபுர நகரிலே விநாயகப் பெருமானை தன் காவற்தெய்வமாக 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பறாளை வயலில் தாபித்து வழிபாடியற்றி வரலானான். பரராசசேகரனும் சிறையிலிருந்து தப்பி முடியுடனும், செங்கோலுடன் சுழிபுரத்திற்கு வந்து கதிர்காமசேகரனுடன் தங்கலானான். பரராசசேகரன் உதவியுடன் கதிர்காமசேகரன் விநாயகருக்கு கோவிலை கட்டினான்.

இளவரசனும், பரராசசேகரனும் இங்கிருந்து விநாயகனை வேண்டியும் வணங்கியும் வந்தார்கள். பறாளை மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்பு பெற்ற தலமாகும. தமிழரசர்களினால் ஆதியில் ஆலயம் கட்டப்பட்டதை பள்ளு தெரிவிக்கிறது, பிராமண மந்திரி நயவஞ்சகமாக பரராசசேகரனைக் கொன்றான். பின்னர் பிராமண மந்திரி கொலை செய்யப்பட்டான். அரண்மனை சமயற்காரன் காக்கைத்தம்பியினால் காட்டிக் கொடுக்கப்பட்டு சங்கிலி போத்துக்கீசரால் இறந்தான். கதிர்காமசேகரன் பறாளை விநாயகனை பரிபாலித்து வரலானான். பின்பு தனபாலசிங்க முதலி, இராசசேகரன், தனிப்புலிசிங்கமுதலி, பரராசசிங்கன், சந்திரசேகரமானாமுதலி ஆகியோரால் சந்ததி வழியாக ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

# காக்காய்ப்பிள்ளையார்

அந்நியர் ஆட்சிக்காலங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஏனைய ஈழத்து சைவாலயங்கள் தரைமட்டமாகக்கப்பட்டன. சில சைவக் கோயில்களை, மாதா, மேரி, ஆலயம் என ஏமாற்றிப் பாதுகாத்தார்கள். இடிக்க முயன்றும் அவர்களால் முடியாமல் போனது ஈசுர விநாயகன் அற்புத திருவிளையாடல் ஆகும். ஒல்லாந்தர் பறாளை விநாயகர் கோவிலையும் இடிக்க முயன்றார்கள். பிரபு வை.குலசேகரம்பிள்ளை தண்டிகையில் கோவிலுக்குச் சென்று ஒல்லாந்தரை கோவிலை இடிக்க விடாது தடுத்தார். ஒல்லாந்தர் குலசேகரம்பிள்ளையை மீறி கோவிலை இடிக்க முற்பட்டனர். குலசேகரம்பிள்ளை மனமுருகி கண்ணீர் மல்க "பிள்ளையாரே காப்பாற்ற வேண்டும்" என்று கசிந்து வேண்டினார். அப்பொழுது ஆலய முகட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான காகங்கள் தோன்றி பறந்து , தளபதியினதும் வீரர்களினதும் கண்களிலும் தலையிலும் கொத்தி இரத்தம் சொரிந்தது. அவர்களால் ஒரு கல்லைத்தாயினும் இடிக்க முடியாது செய்து விட்டன. குலசேகரம்பிள்ளையை மந்திர சக்தி மிகுந்தவராக எண்ணி பயந்து கோவிலை இடிக்காது விட்டார்கள். தளபதிக்கும் ஏனையோர்க்கும், ஏற்பட்ட காயத்திற்கு குலசேகரம்பிள்ளை சிகிச்சையளித்துக் குணமாக்கினார். தளபதி மகிழ்ந்து தண்டிகை குலசேகர முதலியார் என வியந்து பாராட்டினார். இந்த அற்புதத்தின் பின்னர் மக்கள் காக்காய்ப்பிள்ளையார், கண்கொத்தி பிள்ளையார் என அழைக்கலானார்கள்.

# தலச் சிறப்பு

ஆம்பலும் தாமரையும் மலருகின்றதும், மா பலா வாழை கமுகு கரும்பு சோலைகள் சூழ்ந்ததும், சங்குகள் ஊர்கின்றதும், பவளக் கொடிகள் வளருகின்றதும், பயிர்கள் செழித்த களனிகள் நிறைந்ததும் ஆன சுழிபுரத்தில் மருதநிலத்தின் இந்திரனாக பிரபு ஆறுமுகனார் வாழ்ந்தார். இரதங்கள் தண்டிகை, பல்லக்கு பரிவாரங்களுடன் சகல கலைகளிலும் வல்லவனாக சிறந்து விளங்கினார். கதிர்காமசேகரனால் 1530இல் கட்டப்பட்ட சுண்ணக்கல் ஆலயம் திருத்த முடியாதவாறு மிகவும் பழுதடைந்து விட்டது. 1859இல் பெரிய பரிகரியாரியார் ஆலய உரிமைக்காரராகவும், முகாமையாளராகவும், பராமரிப்புக்காரராகவும் பொறுப்பேற்றார். வைரக்கல்லால் புதிதாக ஆலயம் கட்டுவதற்கு தீர்மானித்தார்.

1884இல் பறாளை விநாயகர் சுண்ணக்கல் ஆலயத்தை ஆறுமுகம் இடிபித்தார். அக்காலத்தில் ஒருவர் ஆறுமுகத்திற்கு எதிராக பொய்யான வழக்கு போட்டார். நீதிமன்ற விசாரணை நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு வருடத்துள் அவர் இறந்து விட வழக்கு தோல்வியடைந்தது.

ஆலயம் முழுவதையும் இடித்து புதிய ஆலயத்திற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும்போது கோவிலை தவறான வழியில் அபகரிப்பதற்காக நன்னித்தம்பி என்பவர் 1889இல் நீதிமன்றில் வழக்குப் போட்டார். ஆனால் பெரிய பரிகாரியார் சமர்பித்த ஆவணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் ஆலயம் ஆறுமுகத்திற்கு சொந்தமானது, உரிமையாளரும் முகாமையாளரும் அவரே என ஏற்று அவரை இடை நிறுத்தம் செய்யவில்லை. வழக்காளியும் தமது நிபந்தனையை ஏற்றதால் இணங்கினார். ஆறுமுகனார் இணக்கத்தையே நீதிமன்றம் தீர்ப்பாக அறிவித்து, வழக்காளி பெரிய பரிகாரியாரின் நிபந்தனையை நிறைவேற்றாமல் முகாமையாளர்களுள் ஒருவராக சேர்க்கப்படாமலே ஒரு வருடத்துள் இறந்து போனார். இவை எல்லாம் விநாயகன் திருவிளையாடல்களே. பெரியவர் 1891இலிருந்து தமது சொந்தப் பணத்தையும் பொருட்களையும் செலவு செய்து வைரக்கற்களால் புதிய ஆலயத்தை கட்டிவரலானார்

# விநாயகன் சித்திரத் தேர்

கவின் கலையழகும் சித்திர சிறப்புக்களும் நிறைந்த ஈசுரவிநாயகன் தேர்த் திருப்பணியை 18ஆம் நூற்றாண்டிலே தமது செல்வத்தைக் கொண்டு தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் நிறைவேற்றினார். ஒல்லாந்த அரசில் முதலியாராக வேலை பார்த்த நல்லூர் மாப்பாண முதலியார் அந்நிய ஆட்சியினரால் திருப்பணிக்கு இடையூறு ஏற்படாது உதவினார். வன்னியிலிருந்து மரங்களைப் பெற்றுக்கொள்ள அங்கு கடமையாற்றிய நாகநாதர் உதவினார். இந்தியாவிலிருந்து சிற்பிகளை அழைத்துவர செல்வநாயக முதலி உதவினார். இக்கனவான்கள் மூவருக்கும் குடும்ப வைத்தியராகவும் நண்பராகவும் பிரபு விளங்கினார். மிகுந்த கலை நயத்துடன் 1790இல் தேர் அமைக்கப்பட்டது. தேரினை நிறைவு செய்தபொழுது தேர் ஆகாயத்தில் எழும்பியதாகவும் சிற்பி உடனே சில்லில் ஒரு பகுதியை வாச்சியால் உடைத்த போது நிலத்தில் அமர்ந்ததாகவும் வரலாறு கூறுகிறது. தேரின் வெள்ளோட்டத்தின் போது ஈசான மூலையில் சிற்பி குருவியாகப் பறந்து விட்டார். இந்திய சிற்பி வழிபட்ட இயந்திரமே சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் கோவிலாக பரிணமித்தது. வைத்திய திறமையினாலும், செல்வத்தினாலும் நிலப்பிரபுத்துவத்தினாலும், குடிகளாலும், சீர்வரிசைகளினாலும் ஒப்பாரு மிக்காருமின்றி விளங்கிய இராசப் பிரபு தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் தேர்த்திருப்பணியை நிறைவேற்றினார் என்பதை வைத்தியாச்சாரி தாமோதரம்பிள்ளை 1985ஆம் ஆண்டு பறாளை விநாயன் சித்திரத்தேர் என்ற வெளியீட்டில் தெரிவித்துள்ளார்.

## குலசேகர பிரபு வம்சம்
# தண்டிகை சுப்பிரமணியபிள்ளை

சந்திரசேகர மானாமுதலிக்கு பின் மகன் கதிர்காமரினால் 18ஆம் நூற்றாண்டில் திருத்திக் கட்டப்பட்டது. அவர் மகன் தனிப்புலி சிங்கமுதலி திருப்பணிகளை நிறைவு செய்தார். 1755இல் தமது சகோதரி கணவனாகிய தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் மகன் சின்னத்தம்பியாரையும் முகாமையாளராக சேர்த்து கோவிலை பரிபாலித்து வந்தார். பரராசசேகரனை நயவஞ்சகமாக கொலை செய்த மந்திரி பிராமண குலத்தைச் சேர்ந்தவனாகையால் ஆலய கருமங்களுக்கு சைவக் குருமாரையே நியமிக்க வேண்டும் என்ற கொள்கை மகன் கதிர்காமசேகரன் காலத்திலிருந்தே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தமது இறுதிக் காலத்தில் தனிப்புலி சிங்க முதலி ஆலயத்தை சகோதரி மகனாகிய சுப்பிரமணிய பிள்ளையிடம் 1789இல் ஒப்படைத்தார். பசுவின் கழுத்து மணி ஓசையும், அன்னக் கூட்டத்தின் ஒலியும் புல்லாங்குழலின் ஒலியும், தமிழ் இசை ஒலியும் சந்தன மரங்களின் எண்ணெயினால் ஈரந்தோய்ந்த தென்றலும், சூழ்ந்த பறாளை விநாயகன் அற்புதங்களை சொல்லால் வர்ணிக்க முடியாது. பிரபு சுப்பிரமணிய பிள்ளை உரிமைக்காரராகவும் முகாமையாளராகவும், 1823 வரை பறாளை விநாயகரை பராபரித்து வந்தார். சுப்பிரமணிய பிள்ளை மகனும், பெரிய பரிகாரியாரின் தந்தையுமான வைரமுத்து 1824இல் இருந்து அறங்காவலாராகவும் முகாமையாளராகவும் 1858 வரை திருக்கோவிலைப் பராபரித்து வந்தார்.

# பாடல் பெற்ற தலம்

நல்லூர் வில்லவராய முதலியார் மகன் சின்னத்தம்பிப் புலவர் சிறந்த புலமையுள்ளவர், 18ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். இவர் பறாளை விநாயகன் மேற் பக்தி மேலிட்டு அவரைப் பாட்டுடைத் தலைவராக கொண்டு பள்ளுப் பிரபந்தமாக சுழிபுர நகரின் சிறப்பையும் வேளாண்மையின் மகிமையையும் புகழ்ந்து பாடியவர். பரராசசேகர மன்னனின் சந்ததியினராகிய பறாளை விநாயகன் கோவில் பராபரிப்புக்காரராகவுமிருந்தவர்களையும் புகழ்ந்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விநாயகர் ஆலய முன்றலில் அலங்கார மேடையிலிருந்து பள்ளுப்பாட்டினை சின்னத்தம்பி புலவர் பாடியதாகவும், பாடி முடித்ததும் தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் பொற்காசுகள் பரிசு அளித்து பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார். புலவர் ஏட்டினை அவரிடம் வழங்கினார் அவரிடமிருந்து பள்ளு ஏடு சந்ததி வழியாக தமக்கு கிடைத்ததாகவும் முதலியார் தெரிவித்தார்.
ஆனால் இப்பள்ளு நூலை அச்சேற்றியவர்கள் இறுதியில் சில பாக்களை சிதைந்து போய்விட்டதாக தெரிவித்து அச்சேற்றவில்லை. 1932ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டபொழுது பெரிய பரிகாரியார் வைரமுத்து ஆறுமுகத்தினால் 1915இல் முழு ஆலயமும் புதிதாக கட்டப்பட்டது என்று பெருமையாக குறிப்பிடப்பட்டிருந்தது. சுழிபுர யூனியன் 1956 இல் பதிப்பித்த பொழுது உள்நோக்கத்துடன் அந்த உண்மையை விழுங்கி விட்டது, சிறுமையை காட்டுவதாக அமைந்துள்ளது. பிரபு பெரிய பரிகாரியாரினதும் சந்ததினரதும் புகழும் கிர்த்தியுமே சுழிபுரத்தின் பெருமையாகும். அவரின் குடும்ப வரலாற்று புகழையும், ஆலய வரலாற்றையும் மறைத்தும், திரித்தும் சிலர் கூற முற்படுவது சூரியனை குடையால் மறைக்க முயல்வதற்கு ஒப்பாகும். தவம் செய்வதற்கு பதிலாக சிலர் ஆசையுட்பட்டு அவம் செய்வதால் சுத்தர் பணிந்த சுழிபுரம் ஐயத்திற் இடமாக மாறியுள்ளது. அறங்காவலர் சபைத் தலைவராக இருந்த தனிப்புலிசிங்க முதலியார் வசமிருந்த பறாளை விநாயகர் பள்ளு ஏட்டுப் பிரதியில் சிதைந்து போய்விட்டதாக பிறரால் கூறப்பட்டு அச்சேற்றப்படாத பாக்கள் சிதையாமல் காணப்பட்டதை பலரும் அறிவார்கள். அவை முன்னர் வரலாறு நூலில் வெளியிடப்பட்டவை.

பள்ளுப்பாட்டு வயற் செய்கைகளை நயம்பட உரைப்பதாகும். வயற்செய்கையில் முதன்மையானது நாளேர் அடித்தலாகும். நாளேர் அடித்தலுடன்தான் வயற்செய்கை ஆரம்பிக்கின்றது. தமிழ் மண்ணில் மன்னர்களே பண்டைக்காலம் முதல் நாளேர் அடித்து வந்தார்கள். 1620க்கு பின்னர் யாழ்பாண ராச்சிய மன்னர் பரம்பரை இராசப்பிரபுக்களே சுழிபுரத்தில் நாளேர் அடித்து வந்தார்கள். அவர்கள் நாளேர் அடித்ததன் பின்னரே நாட்டில் ஏனையோர் நாளேர் அடிப்பது வழக்கமாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரபு ஆறுமுகனார் நாளேர் அடித்து வயற் செய்கையை ஆரம்பித்து வந்தார். ஆங்கிலேய அரசின் அதிகாரம் படைத்த உடையார் அந்த வழக்கத்தினை மாற்றி தாம் நாளேர் அடிக்க முற்பட்டதும், அந்த வருடம் ஆறுமுகனார் அவரையே பூட்டி நாளேர் அடித்ததும் வரலாறாகும். ஆறுமுகனாருக்கு பின்னர் பிரபு சுப்பிரமணியம் நாளேர் அடித்து வருடாவருடம் வயற்செய்கையை ஆரம்பித்து வந்தார்.

# தீர்த்த விசேடம்

இந்திரன் சாபம் பெற்றதால் சுழிபுரத்தில் மீனவனாகப் பிறந்து மீன் பிடித் தொழில் புரிந்து வந்தான். இந்திரனுக்கு சாப விமோசனம் அளிப்பதற்காக திருமால் மீனாகத் தோன்றி மீனவனை அலைக்கழித்தும் தாக்கியும் வலையில் அகப்படாதும் துன்புறுத்தித் தொந்தரவு செய்தது. பின்னர் மீனவர் பலரும் சேர்ந்து வலை வீசி மீனை அகப்படுத்தி கரை சோத்தார்கள். கரை சேர்ந்ததும் மீன் மணிவண்ணனாக காட்சியளித்தார். மீனவன் சாபம் நீங்கி இந்திரனாக மாறி மணிவண்ணன் பாதங்களை தொழுதான். தான் வணங்கிய மணிவண்ணன் பாதச்சுவடுகள் நிலைத்திருக்க வேண்டும் என்றும், இத்தீர்த்தக்கரையில் நீராடுபவர்களின் எல்லாப் பாவங்களும் நீங்கி புண்ணியமடைய வேண்டும் என்றும் வரம் கேட்டான். கண்ணனும் வரங் கொடுத்தான். திருமாலின் திருவடி பதிந்த நிலையம் திருவடி நிலையம் என அழைக்கப்படலாயிற்று. அன்றிலிருந்து புனித புண்ணிய தீர்த்தமாக இருந்து வருவதை புராணங்கள் எடுத்தியம்புகின்றன. சுழிபுரத்தின் மேற்கில் சமுத்திர கரையில் பொன்னாலயத்திற்கும் சம்புத்துறைக்கும் நடுவே திருவடிநிலை அமைந்துள்ளது. கி.பி. நாலாம் நூற்றாண்டிலும் கண்ணன் பாதச்சுவடுகள் நல்ல நிலையில் காணப்பட்டதாக வரலாற்றாளர்களின் குறிப்பிலிருந்து அறிய வருகிறது. இதன் பின்னர் நாகநாட்டின் இந்தப் பகுதி மணிபல்லவம் என்ற காரணப்பெயர் பெற்றது. மணி - மணி வண்ணன், பல்லவம் - தளிர் போன்ற பாதங்கள், அது காணப்பட்ட இடம். சிலர் மணிபல்லவம் என்றால் என்ன என்பது தெரியாத நிலையில் வேறு இடங்களைக் குறிப்பிடுவது ஆதாரமற்றதுடன் பொருத்தமற்றதுமாகும். வரலாற்றாய்வாளர்களும் இனிமேல் மணிபல்லவம் என்றால் யாழ்குடாநாடு என்பதனை ஏற்றுக் கொள்ளத் தடையிருக்க முடியாது.

திருவடி நிலைக்குச் சமீபமாகவே கூர்மாவதாரம் எடுத்து ஆமை கல்லாக மாறிய திருவிளையாடல் இடம் பெற்றது. அத்திருப்பதி பொன்னாலயம் என அழைக்கப்படுகின்றது. இத்திருவிளையாடல்கள் காரணமாக இத்தீாத்தம் மிக மேன்மையானதாகவும் புண்ணிய விசேடம் கொண்டதாகவும் சைவர்களினாலும் கண்ணன் அடியார்களினாலும் போற்றப்பட்டு வருகிறது. பொன்னாலைப் பெருமாள் ஆயிரமாண்டுகட்கு மேலாக இங்கு தீர்த்தம் ஆடி வருகிறார். பதினாறாம் நூற்றாண்டிலிருந்தே ஈசுர விநாயகரும் பறாளையிலிருந்து திருவடி நிலையிலேயே தீர்த்தம் ஆடி வருவது விசேடமாகும்.

சிவன் பாதம் பதிந்த இடம் சிவனொளிபாதம், மணி வண்ணன் பாதம் பதிந்த இடம் மணிபல்லவம்(திருவடி நிலை). தெய்வீகச் சிறப்புப்பெற்ற இரு இடங்களினாலும் இலங்கை திருவிடம் என அழைக்கப்படுகின்றது. இலங்கையின் குடிகள் புனிதர் என்ற கருத்தில் திராவிடர் எனப்பட்டனர்.

# திருக்கோவில் பரிபாலனம்

திருக்கோவில் அறப்பணி சிறக்க ஆலயத்தை 1909 இல் அறச் சொத்தாக்கி அறக்கட்டளையை ஏற்படுத்தி அறங்காவலர்களாக தம்முடன் தம்பிப்பிள்ளையையும் வைரமுத்துவையும் சேர்த்துமூவர் கொண்ட அறங்காவல் சபையையும் அமைத்தார். தமது சொந்த நிலங்களில் ஐந்தை அறக்கட்டளைக்கு நல்கினார். அறச் சொத்துக்களை பேணிப் பாதுகாக்காத திருவிலுாரும் அடவி காடே. கோவிற் சொத்துக்களை சுரண்டுவது வேதனைக்குரியதாகும். தமது ஆண் சந்ததியினர் தொடர்ந்தும் தலைமுறைத்தத்துவமாக அறங்காவலர்களாகவும் முகாமையாளர்களாகவும் இருந்து ஆலயத்தைப் பரிபாலிக்க ஏற்பாடு செய்தார். 1912இல் கட்டிட வேலைகள் நடைபெற்று வருகையில் சேர் பொன் இராமநாதன் துரை தமது கண் பார்வையை மீட்டுத்தந்த பெரிய பரிகாரியாருக்கு நன்றிக் கடன் செலுத்த விரும்பி, பறாளை விநாயகனை வணங்கி ஆலயத்திருப்பணியை தாமே நிறைவு செய்ய விரும்பினார். பெரியவர் அதற்கு அனுமதிக்க வில்லை. ஞாபகாத்தமாக விக்கிர பீடத்தையும் கோமுகைக் கல்லையும் இராமநாதனிடமிருந்து அன்பளிப்பாக பெற்று ஆலயத்தில் வைத்து கட்டினார். பிரபு ஆறுமுகம் தமது பொருட்களையும், சொந்தப் பணத்தில் ரூபா ஒன்பதினாயிரம் செலவழித்து ஆலயத் திருப்பணியை நிறைவு செய்து சைவ தமிழ் பாரம்பரியத்தைப் பேணினார்.

தேனார் மலாச்சோலை செழித்த சுழிபுரத்தில் சுந்தரம் சேர் பறாளைப் பதியிலே ஈசுர விநாயகருக்கு அழகிய ஆலயம் அமைந்தது. விநாயகர் திருவருளாளல் 1915இல் இராட்சத வருடம் வைகாசி மாதம் 22ஆந் திகதி வெள்ளிக்கிழமை இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் பிரபு தண்டிகை சுப்பிரமணியம் சகல கருமங்களையும் தாமே முன்னின்று நடாத்தி பறாளை ஐந்துமுகனுக்கும், ஆதீன கர்த்தா ஆறுமுகனுக்கும் குடமுழுக்கினை வெகு விமரிசையாக நிறைவேற்றி வைத்து ஆலய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றார். 1909ஆனி மாதம் 9ஆந் திகதியிலிருந்து அறக்கட்டளைப்படி அறங்காவல் சபை ஆலயத்தை பரிபாலித்து வருகிறது. கும்பாபிசேக அறிவித்தலில் தமது சொந்தப் பொறுப்பில் வைரக்கற் திருப்பணியாக செய்யப்பட்டதை ஆதீன கர்த்தாவும் முகாமையாளருமான ஆறுமுகம் தெரிவித்துள்ளமை கவனிக்கப்பாலது. ஆறுமுகனார் ஐந்துமுகனுக்கு பெருங்கதைப்படிப்பு ஆரம்பித்து நடாத்தி வந்தார். பிள்ளளையார் கதை 21 நாட்கள் சிறப்பாக நடந்து வருகின்றது.

# அறங்காவலர் சபை

பிரபுக்கள் தம்பிப்பிள்ளை, வைரமுத்து மூத்தம்பி, சுப்பிரமணியம் 1917லிருந்து அறங்காவலர் சபையாக ஆலயத்தை பரிபாலித்து வந்நதார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பத்தாயிரம் செலவு செய்து சுற்றுக் கொட்டகைகளையும், சுற்றுமதிலையும், மற்றைய திருப்பணிகளையும் 1920இல் நிறைவு செய்தனர்.

தம்பிப்பிள்ளைக்கும் வைரமுத்துவுக்கும் எதிராக ஒருவர் 1917இல் நீதிமன்றில் வழக்குப் போட்டார். ஆலயத்தின் உரிமையாளர்கள் தம்பிப்பிள்ளையும் வைரமுத்துவும் என்பதை ஏற்று முகாமையாளர் நியமனம் சம்பந்தமாக 1891இல் ஆறுமுகத்தின் நிபந்தனை வழக்காளியினால் நிறைவேற்றப் படவில்லை யாதலால் இணக்கத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்த முடியாது என தீர்ப்பு வழங்கியது.

குலசேகரம்பிள்ளை, பூலோகசுந்தரம், அப்புத்துரை இராசா, கந்தசுவாமி, பாலச்சந்திரன், சுப்பிரமணியம் செல்வத்துரை, தனிப்புலிசிங்க முதலியார் 1925ஆம் ஆண்டு ஒருமித்து அறங்காவலர்களாகவும், முகாமையாளர்களாகவும் பொறுப்பேற்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பதினையாயிரம் செலவு செய்து மடைப்பள்ளி, களஞ்சியம், பூந்தோட்டம் முதலியவற்றை அமைத்தார்கள். பெரிய பூலோகமும், குலசேகரம்பிள்ளையும் இறந்த பின்னர் சின்னையா அறக்கட்டளையை ஏற்று அமைவாக நடப்பதாக அறங்காலர்களுடன் இணங்கி ஒத்துழைத்து முதலாம் திருவிழா உபயாரரானார். கொடியேற்றம் முகாமை ஆலய பரிபாலனம் அறங்காவலர் சபையினாலே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1981இல் அறங்காவலர்கள் தமது சொந்தப் பணத்தில் ரூபா32 ஆயிரம் செலவு செய்து கோவிலை திருத்திக் குடமுழுக்கை தலைவர் தனிப்புலிசிங்க முதலியார் நிறைவு செய்தார். அடியார்களும் மேலதிகமாக திருப்பணிகளை நிறைவேற்ற உதவினார்கள். 1985இல் அறங்காவலர் சபை 19 அறங்காவலர்களுடன் விளங்கியதால் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகள், யாப்பு விதிகள், நிர்வாக சபை விதிகள் உருவாக்கப்பட்டு அறங்காவலர் சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றது. உபயகாரர் சின்னத்துரையின் உபயமும் சில வருடங்கள் நிறுத்தப்பட்டது. தனிப்புலிசிங்க முதலியார் தலைவராகவும் பாலசுப்பிரமணியம் செயலாளராகவும்

கயிலாயநாதன் பொருளாளராகவும் 1985 இல் இருந்து பணியாற்றி வரலானார்கள். ஆலய பரிபாலனம், உபயங்கள், திருப்பணி முதலிய ஆலய சம்பந்தமான சகல விடயங்களிலும் அறங்காவலர் சபையின் தீர்மானமே தீர்ப்பாகும் என்பதை 1988இல் பகிரங்கமாக அறங்காவலர் சபையால் அறிவிக்கப்பட்டது. காலத்திற்கு காலம் அறக்கட்டளைப்படி அறங்காவலர்கள் சபையினால் நியமிக்கப் பெறுகிறார்கள்.

1988ஆம் ஆண்டு ஆடிமாதம் ஒன்பதாம் திகதி அறங்காவலர்கள் சகிதம் செயலாளர் வைத்திய பேரறிஞர் க.பாலசுப்பிரமணியத்தினால் பறாளை விநாயகனுக்கு குடமுழுக்கு நிறைவேற்றப்பட்டது. அறக்கட்டளையில் காட்டப்படாததும் அடியார்களால் ஆலயத்திற்கு அறச்சொத்தாக்கப்பட்டதுமான மேலும் ஐந்து நிலங்கள் உண்டு. அவற்றை சிலர் மறைத்து வருகிறார்கள். தற்பொழுது 16பேர் அறங்காவலர்களாக உள்ளனர். அவர்களே ஆலய உரிமைக்காரரும் முகாமையாளர்களுமாவர். திருப்பணிகளை நிறைவேற்ற விரும்பும் அடியார்களுக்கு உதவ அறங்காவலர் சபை எப்பொழுதும் தயாராக உள்ளது. அறங்காவல் சபை பதிவு செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளைக்கு எதிராக ஆலய கருமங்களில் இடையூறு விளைவிப்பவர்களுக்கும், அறச்சொத்துக்களை சுரண்டு பவர்களுக்கும் எதிராக அறங்காவலர் சபை நடவடிக்கை மேற் கொள்ளும்.

1965ல் கோவில் கருமங்களுக்கு இடையூறாக இருந்தவர்களும் இறை தண்டனை பெற்றார்கள். 1981ல் சமூக ஏற்றத்தாழ்வுகளை கூறி சிலர் குழப்பம் விளைவிக்க முயன்றதை தடுத்து அமைதியை நிலைநாட்டியவர் செயலாளர் பாலசுப்பிரமணியம். ஆலய அறங்காவலர் சபைக்கு எதிராக ஒருவரால், தலைவர் திரு.செ.மயில்வாகனத்திற்கும், செயலளார் வைத்திய பேரறிஞர் க.பாலசுப்பிரமணியத்திற்கும் 1995ல் தொடரப்பட்ட வழக்கும் தோல்வியில் முடிந்தது விநாயகர் திருவிளையாடல்களாகும். அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்ற சான்றோர் முதுமொழி பொய்யாவதில்லை. சிறப்பு மிக்க பல்லவ பேரரசர்களான பரராசசேகரன், செகராசசேகரன் வமிசத்திற் தோன்றியவர் பெரிய பரிகாரியார் ஆறுமுகம் சட்டரீதியாக பறாளை விநாயகர் ஆலயம் ஆறுமுகம் சந்ததிக்கே உரிமையானது. முகாமையாளர்களையோ, உபயகாரர்களையோ, குருமார்களையோ, ஊழியர்களையோ, துணையான சபைகளையோ நியமிக்கவும் நீக்கவும் அறங்காவலர் சபை தத்துவமுடையது என்பதை நீதிமன்றத்தீர்ப்புக்களிலிருந்து அறியலாம்.

**எல்லாம் அவன் சித்தம், எல்லாம் அவன் செயல்**

## காப்பு

தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம்வா ழைங்கரன்மேற்
பல்வளஞ்சேர் பள்ளினிசை பாடவே - வில் வழங்கு
மையாழிக் கண்ணன் மலர்க்கண் வளர்ந்ததிருக்
கையாழிக் கண்ணனே காப்பு.

## துதி

### விநாயகர்

நந்து தவழ நதிதனி லாம்ப னனிமலருஞ்
சுந்தரஞ் சேரும் பழனப் பறாளையிற் றோன்றுசுடர்
வந்தெதிர் நின்ற கயமுகன் றன்னை வதைத்ததந்த
வைந்து கரப்பிள்ளை யென்னகத் தேநின் றருள்செயுமே.

### நடேசர்

சுருதி யின்முத லாகிய காரணர்
துளைபொ லிகர வாரண மாமுகர்
சுழிபுர நகர் மேவுப றாளையி லுறைநாதர்
கரும ணிவிழி யாளுமை பாலகர்
கதிரை யின்வடி வேலர்ச கோதரர்
கருணை யின்மத தாரையி னார்பளி னிசையோதச்
செரும ருவுத்தி சூலவ ராயுதர்
திரிதி ரிபுர கோபர நாமயர்
திகழி ரணிய மேருச ராசனர் பணிநாணர்
பொருமு முவையி னீருரி யாடையர்
புரிச டைவனை மலிசம் பேச்சுரர்
பொதுவி னிடை மாடிய சேவடி மறவேனே.

1. சிவகாமியம்மை

தோட்டு வாரிச நான்முகன் பேணிய
தும்பி மாமுக னம்புவி தாங்கிய
சேட்டு மேருவிற் பாரதந் தீட்டிய
தெனப்ப றாளைப் பரஞ்சோதி யன்னை
கோட்டு வாரணிகொங்கைப் பெருக்குங்
குழற்சு ருக்கு மணிவாய் முருக்கும்பஞ்
சூட்டு சீறடி யுந்துடி நேரிடை
யுடையு மெங்கணு மென்கணி னின்றவே.

## நூல்

## பள்ளியர் தோற்றம்

குத்துமலைக் குவடுகுலுங் கத்தரள வடம்புரளக்
குமுதச்செவ் வாயின்வெள்ளி நகையரும்பத்
தத்துவரிக் கயலை வெருட்டிப் பத்திமணிக் குழையொடுமுட்டித்
தாரைமணிக் கண்களிரண்டுந் தாவடிசெல்லச்
சித்தியளித்திடு சுழிபுரநகருறை கணபதி பணபதிச்
சேடனுநாவா லசைக்கரிய சீரிசைபாடி
யெத்திசையும் புகழுநிதிக் கோனள காபுரியென் றெவருமதிக்கு
மீழமண் டலப்பள்ளி தோற்றினாளே.
01

சின்னவிடை நூ லிறுமிறுமெனச் சீறடியிற் சிலம்பு புலம்பச்
சிறியநுதற் பிறையணிவட்டச் சுட்டியிலங்கப்
பொன்னசலக் குசமதி னவமணி மின்னுதனக் கச்சு நெகிழப்
புனைந்தகருங் கொண்டையில்வண்டு புரண்டு நெருங்கச்
செந்நெல்வயற் சுழிபுர நகருரை கன்னமதத் திறையவர் பரிபுரச்
சேவடியைத் திக்குநோக்கித் தெண்டம்பண்ணிச்
சொன்னநிலத் துறுவசி யிவளென வன்னமெனப் பிடியென நிதிவளர்
சோழமண் டலப்பள்ளி தோற்றினாளே. 02

## பள்ளியர் வரலாறு கூறல்

தோடார் குழலசைய நுதல்வேர் வரும்பியெழத்
துடியுங் கொடியுமன்ன மருங்கு னெருங்கக்
கோடா னவைகுலுங்க மணிமேகலைக ளார்ப்பக்
குழையுங் கயலுஞ் சென்று நின்றாடவே
நீடானை யேறுசந்திர சூடா மணிக்குவந்த
நித்தன் பாரதக்கதையை யாடகக் குன்றை
யேடாக வெழுதினோன் றிருநாமம் பாடியாடு
மீழமண் டலத்தினிற் பள்ளி நானே. 03

கோங்கிளம் புதியமுகைக் கொங்கைக் கௌரிமைந்தன்
கூறுபுகழ்க் கல்லாம னாவசையார்
தாங்குபணி யரையிற்பூட்டு பிரான்பங்கயத்
தாளுக்கல் லாமற்சென்னி சற்றும்வணங்கார்
வீங்குகடல் குடங்கைகொண்டான் கரகநீர்பூ
விட்டான்கோ யிலையன்றிச் சூழ்ந்து துதியார்
தூங்குதழை செவியன்பத்திமைத் தொண்டர்வாழுஞ்
சோழமண் டலத்தினிற் பள்ளி நானே. 04

## பள்ளன் தோற்றம்

சுற்றுகருங் கச்சைக்கட்டி மாதுளம்பூ வுறுமால்
சோரவிட்டுக் கட்டித்துள்ளு மீசை முறுக்கி
வெற்றியரக் குங்குடித்து நீற்றையெம்பெ ருக்கப்பூசி
மேல்வளைய லுந்தரித்து விழிகள் சிவந்து
பற்றியமண் வெட்டிவைத்துச் சருக்கி நடந்து - தங்கப்
பாளத்தாற் சமைத்தகொட்டுத் தோளிற்சுமந்தே
யெற்றவரு மொற்றைமணிக் கொற்றக்கொம்பன் பண்ணைபார்க்கு
மீழமண் டலப்பள்ளன் றோற்றினானே. 05

### கொச்சகம்

பொய்யூரு மிடைக்கௌரி புதல்வனெழிற் புரிக்கோடு
செய்யூருஞ் சுழிபுரத்துச் சேர்ந்தபறா ளையிலுறைய
மையூர்முத் தானவள்ளன் மணிநாட்டு வளம்பேசப்
பையூருங் களிநிதம்பப் பள்ளியர்நா வசைத்தாரே. 06

## பள்ளியர் தத்தம் நாட்டுவளங் கூறல்

போற்று மாதுளை மாணிக்க வித்தைப்
பொதிந்த சோதிக் கனிபல தூக்குந்
தாற்று வாழை யிலைசென்று மாகத்
தரணி மேலால வட்ட மசைக்குந்
தோற்று மாசினி முட்புறச் செம்பழஞ்
சுட்ட பொன்னின் சுளைபல தூற்று
மேற்று வாளை கமுகிற் குதித்திடு
மீழ மண்டல நாடெங்க ளாடே. 07

காடெல் லாங்கரி மான்தஞ் சேருங்
கடலெல் லாம்வெள் வலம்புரி யூரு
நாடெல்லாங்கதிர்ச் சாலி தழைக்கு
நரம்பெல் லாமிசை யேழை யழைக்கும்
வீடெல்லாம் வள்ளைப் பாட்டொலி பூணும் - விண்
மீனெல் லாந்தண் டலைத்தலை காணுந்
தோடெல் லாம்பொறி வண்டுபண் பாடிய
சோழ மண்டல நாடெங்க ணாடே. 08

கண்ண கன்ற வரைத்தலைச் செம்மணிக்
காந்தி தூயநந் தாவிளக் கோர்பால்
வண்ண வேய்ஞ்குழ லூதண்ட ராவின்
மணியி னோசை கறங்குவ தோர்பால்
பண்ணை யோதிமக் கூட்டமு மோர்பால்
பவளக் கொம்பிற்கம் பூர்வது மோர்பா
லெண்ணி னானில மும்புடை யோங்கிய
வீழ மண்டல நாடெங்க ணாடே. 09

மின்னுங் காருங் கரும்புமுத் தீனும்விண்
மீனு மீனு மணிமுத்த மீனு
முன்னுங் கார்மத வேழமுஞ் சேர்கழை
யோங்கல் வேழமு மாரம் பயக்கும்
பன்னுஞ் சீதளப் பங்கய ராசியும்
பாண்டுக் கூனற் பணிலமுஞ் செங்கார்
துன்னுஞ் சாலிக்குழாமு நிறைந் தொளிர்
சோழ மண்டல நாடெங்கணாடே. 10

கோரந் தோய்ந்த வரியஞ்ச னத்தின்
குழம்பு தோய்விழிக் கொம்பனை யார்தா
மாரந் தோய்ந்த களபக் கடாசல
மன்ப னார்புயக் கந்தினிற் பூட்ட
வாரந் தோய்சந் தனமணந் தோய்ந்து
வயங்கு மின்னிசைத் தண்டமிழ் தோய்ந்தே
யீரந் தோயு மிளந்தென்றல் வந்தசை
யீழ மண்டல நாடெங்க ணாடே. 11

நீரிலே லேபுண்ட ரீக மரும்பு
நிழலி லேகரு மேதி யுறங்கும்
வாரிலே லேவெண் டரள நிலாவும்
வரம்பி லேசெந்நெற் பூங்குலை சாயும்

போரிலே லேநெனன் மணிக்குவை சேரும்
பொறியி லேகரும் பாடுங் கரும்பின்
றூரி லேகம டங்கண் வளர்ந்திடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 12

மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ் சூழு
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
யன்ன வன்னக் குழாம்விளையாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 13

தண்ட பாணி யிறைஞ்சு பதாம்புயத்
தாணு நாதன் றிகம்பரத் தூயன்
பண்டை நாகணை யானும் விரிஞ்சனும்
பாதஞ் சென்னி யறியாத நம்ப
னண்டர் நாயகற் கற்புத மீதென
வரிக ளேந்திய வாலய வெற்பைத்
துண்ட வான்கழு கென்றும் வலம்வருஞ்
சோழ மண்டல நாடெங்க ணாடே. 14

அருவி யோதை யிழுமெனுங் குன்றி
லடைந்த சாரற் குளிர்புன மீதி
லுருவு சேர்தினைப் பூங்கதிர் மேற்கிளி
யோச்ச வேண்டிப் புலிநகத் தாலி
மருவு வண்குறப் பேதையர் கட்செவி
மாசு ணப்பண நேர்கவண்மீதி
லிருளி லாத மணிவைத் தெறிந்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 15

மாலை தோறு மிசைவன வண்டுமென்
மாலை நூலிடை யேயுந் துவண்டு
மேலை தோறும் பயில்வன சங்கம்
வியன்க ழகந்தொ றுந்தமிழ்ச் சங்க
மாலை தோறும் பொழிவன சாறுபொன்
னான வீதி யரியரன் சாறு
சோலை தோறு மலர்த்தா திறைத்திடுஞ்
சோழ மண்டல நாடெங்க ணாடே. 16

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களற்
பாயு மோதக் கடற்கரை தோறு
மிப்பிவாயிலின் முத்தமிலங்கிய
வீழ மண்டல நாடெங்க ணாடே. 17

மாரி மேகந் தவழ்மலைச் சாரலின்
மந்தி வைத்த மணிப்பத்ம ராகஞ்
சூரி யோதயம் போல விளங்கிய
சோழ மண்டல நாடெங்க ணாடே. 18

பரப்பு மேகலை மங்கையர் போகம்
பயில வேண்டி யிணங்கார் முகத்தை
யிரப்ப தேயன்றி வேறிரப் பில்லாத
வீழ மண்டல நாடெங்க ணாடே. 19

வாம மேகலைப் பாவையர் கோவை
வதனம் போல விளங்கிய விண்ணிற்
சோமன் மேலன்றி யோர்மறு வில்லாத
சோழ மண்டல நாடெங்க ணாடே. 20

வளமை சேர்ந்திடு மூப்பிய லான்முது
மந்தி தாவி மலையிடைப் பாய
விளமை மந்தி யுருவடி வாய்விடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 21

முன்னை நாளிற்பஞ் சான ரூபன்
முளரி யந்தட மூழ்கிய போதிற்
சொன்ன மேனி விளங்கி யெழுந்திடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 22

உரைத்த வானிந்து காந்தச் சிலைவிட்
டுருகு நீர்ப்பிர வாகங்க ளோடி
யிரைத்த வேலைப் புலால்வெடி மாற்றிடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 23

பகுத்த வந்தணர் சாலைக டோறும்
பயிலும் வேதத் தொலிபண்ணை மீதிற்
றொகுத்த மள்ளர் குரவையை மாற்றிடு
சோழமண்டல நாடெங்கணாடே 24

பண்ணிற் றோயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 25

செல்லுஞ் சென்முடித் குந்தளக் கண்ணிரு
சேலைப் போன்ற கடைசியார் செய்க்குச்
சொல்லுஞ் சொன்முடிப் புக்கட்டி வைத்திடுஞ்
சோழ மண்டல நாடெங்க ணாடே. 26

காந்தி சேர்கண் ணிலாதவர்க் குக்கண்ணுங்
காட்சி யுந்தந்து சூர்ப்பகைச் செவ்வே
லேந்தல் சேர்கதி ராபுரி சேர்ந்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 27

பொங்கு கூனி பிடித்தவர்க் குக்கூனி
போக்கி யிக்கலி மீதினிற் செவ்வேற்
றுங்க முத்தையன் வீற்றிருக் கும்புரிச்
சோழ மண்டல நாடெங்க ணாடே 28

கயல்வ ரைந்த துவசன் பணிநவ
கண்டி மன்னன் பரராச சிங்க
னியல்பு டன்றிருச் செங்கோ னடாத்திய
வீழ மண்டல நாடெங்க ணாடே. 29

நேரி யன்சரண் புக்க புறாவி
னிறைத னக்கு நிறையிற் புகுந்த
சூரி யன்குடை நீழலிற் றங்கிய
சோழ மண்டல நாடெங்க ணாடே. 30

கான்ற சோதியி னித்திலஞ் சிந்துங்
கரும்பி னிற்குருத் தைக்கதிர்க் கற்றை
யீன்ற சாலிக் குழாஞ்சுமந் தோங்கிடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 31

சாதி நாகிளந் தெங்கினிற் சாய்ந்திடு
தண்கு ரும்பையைப் பூகத ராசிச்
சோதி யார்பவ ழக்குலை தாங்கிய
சோழ மண்டல நாடெங்க ணாடே. 32

கற்று நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
காவி யஞ்சட் கலைக்கட றோய்ந்து
மெற்றை நாளுங்கல் வித்திறம் பாாத்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 33

திகந்த மெட்டும் வடகலை தென்கலை
தேர்ந்து தேர்ந்து செழுமலர்க் காவிற்
சுகந்த னக்கயற் பூவை பயிற்றிடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 34

ஆட்டு மூசலி னாடுமின் னார்பொன்
னணிக லத்தின் மணிதெறித் தோடி
யேட்டுக் காவிற் குயிற்றுயின் மாற்றிடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 35

வாவியின் கரைக் கெண்டை குதிக்க
மண்டு கம்பாய்ந்து செந்தா மரைப்பாயற்
றூவி யன்னத்தி னித்திரை மாற்றிடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 36

கோல மாதவி வன்னி மராமரங்
கோங்கு வேங்கை செங்குங்கு மஞ்சாதி
யேல மார்கதிர்க் கற்றையை மாற்றிடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 37

ஆலை தாதகி பொன்னிறக் கொன்றை
யரும்பு கூவிளம் பாதிரி புன்னைச்
சோலை வான முகிலைத் தரித்திடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 38

கருவல லம்புரிச் செங்கதிர் மாவலி
கங்கை யாறு பெருகிக் கரையி
னிரும ருங்கினு முத்தங் கொழித்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே. 39

வள்ளி யோரிற் கொடைநிறைந் தேநுரை
மண்டி யேவரு காவிரி யாறு
துள்ள வாளை பசும் பொ னிறைத்திடு
சோழ மண்டல நாடெங்க ணாடே. 40

## வெண்பா

ஔவியநெஞ் சொன்றுமின்றி யன்புபுரி பத்தர்வினைச்
செவ்வியகோ டைக்குநிழல் செய்யுமே - வைவேற்
றுதிசெய்குருந் துக்குத் துணையாம் பறாளைப்
பதியொருகோட் டுக்கற் பகம்.

### குல முறை கிளத்தல்

*சிந்து*

1. ஆதிகாலத்தி லாருயிர் யாவு
மளித்த ளித்துக் துடைக்கும் பிராட்டி
பாதி யம் புலி வாணுதற் சத்திநாற்
பத்து முக்கோண சக்ரவி நோதி.

2. தூய சோதிப் பனிவரைக் கொம்பெனுந்
தோகை தன்னை மணச்சாலை தன்னு
ளாய வேதப் பிதாமகன் பேணி
யமையு மோமச் சடங்கு புரிய

3. வென்றி சேர்வெள் ளுவாப்பிட ரேறிய
வேந்த னேமுத லெண்டிசை காப்போர்
மன்ற னாறுந் துழாய்மவு லிபபணி
வயிரி யூர்ந்திடு வைகுண்ட நாதன்

4. எண்ணில் கோடி வயிரவர் சூழ்ந்திட
வெண்ணில் கோடி யுருத்திரர் சூழப்
பண்ண மைந்த பசும்பரி யேழுடையப்
பருதி வானவ ரும்வந்து சூழ

5. அண்ட பந்தி யெடுத்துக்கை யம்மானை
யாடு பூத கணங்க ணெருங்கப்
பண்டையூழிக் கனல்விழிச் சோதிப்
பணக ணாடவிச் சேடனுஞ் சூழச்

6. சித்தர் சாரணர் சூழ்ந்திட நாரதன்
சேருந் தும்புரு யாழிசை பாடப்
பத்தி வாணன் குடமுழ வத்துடன்
பானு கம்பன் பணில முழக்கத்.

7. தேரு நாமகள் கீர்த்தி யிசைக்கத்
திரும டந்தைநன் சேடியு மாக
வாரு லாவு குயத்தின் கவுரியை
வந்து சேவித்துப் பக்கலி னிற்கும்.

8. அமய மூன்று மணிவரைக் கண்டத்
தலங்கு மங்கல நாணது பூட்டி
யிமய ராசன் புனல்வார்ப்ப மால்வரை
யீன்ற பாவை தனைக்கைப் பிடித்து

9. வேட்ட பின்கதி ராடகப் பூதர
வில்லி யும்வல்லி யும்முறை போதிற்
கோட்டு மாவும் பிடியும் புணர்ச்சியிற்
கூடியே விளையாடுதல் கண்டு

10. சக்தி யுஞ் சிவ மும்பிடி யும்மத
தந்தி யாகப் புணர்ந்தவந் நாளின்
மத்த மாவத னத்துட னோங்கார
வண்ண மாய்வந்த ஞானக் குழவி

11. அன்னை தேவி மனோன்மணி கொங்கை
யமுத தாரை பருகிய நேசன்
முன்னர் நின்றிகல் சூரனை வென்ற
முருக வேட்குமுன் னாகிய தோன்றல்

12. தந்த தந்தை பரம னுகைத்திடு
தட்டு டைத்தடந் தேரச் சிறுத்தோன்
முந்த நெஞ்சி னெவர்நினைந்தாலு
முயன்று முன்னின்றுகாத்தரு ளெம்மான்

13. தூய மூவுல கும்புகழ் வீசிக்
துதிக்கை வாய்ந்த துதிக்கையொன் றுள்ளான்
பாயுந் தானம் படைத்திடு காரணன்
பத்த ரானவர்க் கன்பு புரிவோன்

14. மார்பின் முன்றணி நூல்புனை நாதன்
மழலைத் தும்பி குடைகொன்றைத் தாமன்
பார தக்கதை யைப்பொற் சிலம்பினிற்
பாணித்த தந்தம் பறித்துப் பொறித்தோன்

15. செறியும் பஞ்ச தருநிழற் சுந்தரத்
தேவர் கோன்புரி பூசனைக் காகக்
குறுவன் பாணி கரகத்திற் பாணி
குவல யத்திற் பெருகிடச் செய்தோன்

16. மோது மோதப் பயோதகி மீது
முடக்கு நெட்டெயிற் றுப்பணைச் சேக்கை
மாதவன் கொண்ட வன்பணிச் சாபத்தை
மாற்றி மேலும் வரந்தந்தத வண்ணல்

17. பங்க யங்கனி மாதுளங் கும்பம்
பரப்பு நேமி கதாயுதஞ் சங்க
மங்கு சந்தனு வேந்திய பாணிய
னாகு வாகன மூர்ந்திடு நேசன்

18. அந்த ரத்தரு ணோதயர் கோடி
யருக்கர் போல விளங்குசெம் மேனி
யெந்தை வான்சரற் காலத்துச் சந்திர
னென்னத் தோற்றும் வடிவமும் கொண்டோன்

19. நாக கன்னியர் தான்றொழு மைங்கர
னாளு மெள்ளுண்டை மோதகஞ் சீனி
பாகு சர்க்கரை மாங்கனி யீங்கிவை
பார ணம்புரி யுந்தொந்தித் தந்தி

20. செருக்கு மூடிய ராவண வஞ்சனைச
சேண்பு லத்தெறிந் தாடிய வீரன்
மருக்கு லாவுவெண் டாமரைப் பீடிகை
வாழுஞ் சோதி யடியார்க் கெளியோன்

21. மாறெ திர்ந்து பொருத கயமுக
வாள ரக்கனை விண்டலத் தேற்றித்
தேறு கொன்றை யுடன்வாகை வேய்ந்தவன்
சில்ல ரிக்கண்ணி வல்லபை பாகன்

22. மானஞ் சேர்விக்ர மாதித்த வேந்தன்
மதிக்க நித்திரைப் பள்ளியிற் சென்று
கானஞ் சேர்குகுழன் மாரை யகற்றுதி
நாளை யென்று கனாவினிற் சொன்னோன்

23. ஆமை யேன மழுப்படைச் செங்கைய
ராகு ராமர் குறள்சிங்க மச்ச
நாம வேயனொான் பானுற் பவித்தவ
னாபி யிற்புவ னம்பல பூத்தோன்

24. தண்ட நேமி தனுவோடு வாள்சங்கத்
தாங்கி வேலை யிறிதுயில் செய்யுங்
கொண்டல் வண்ணன்பொன் னாலைப் பதியுறை
கோல நீல நெடுமான் மருகன் 42

வேட்டுவன்வா யுண்டுமிழ்ந்த மிச்சிலுவந் தான்புதல்வன்
தோட்டுவளஞ் சூழும் சுழிபுரத்தி லானைமுக
னாட்டுவளம் பேசியபுன் நவ்விழிக் கொம்பனையார்
கோட்டுநனை மாவின் குயிலிசையைக் கேட்டாரே 43

## குயில் கூவுதல்

ஆனே றுயர்த்தகொடி யந்தண னுவந்ததிரு
வாலையம் விளங்கவே கூவாய் குயிலே 44

தேனே றுகொன்னை யணிசிவனெழுத் தஞ்சுமே
செகமீதி னிலைபெறக் கூவாய் குயிலே 45

மீனேறு கடலால போசனன் பரியான
வேதந் தழைத்திடக் கூவாய் குயிலே 46

மானேறு வரிநயன மங்கையொரு பங்கனார்
வாழ்சமய மெய்யென்று கூவாய் குயிலே 47

பூரிவரை மேலா ரணப்போலி யதனைப்
பொறித்தபெரு மானென்று கூவாய் குயிலே 48

பேரியென மாலொலி முழங்கிமைய பூதரப்
பிடிதந்த களிறென்று கூவாய் குயிலே 49

மாரனை யளித்தகண்ணன் புயங்கப் படிவ
மாற்றுபெரு மானென்று கூவாய் குயிலே 50

ஆரமணி யாலைவயல் சூழ்தென்ப றாளையுறை
யைங்கரனை வாழ்த்தியே கூவாய் குயிலே 51

ஆயிரம்பகு வாயனந்தனின் வீறு கண்டுயில் வாரிருந்தபொன்
னாலையம்பதி வாழவே கூவாய் குயிலே 52

கோயிலின்னதி காரமன்றென வீசனன்புறு மாதொடொன்றிய
கோணயங்கிரி வாழவே கூவாய் குயிலே 53

ஆயிசுந்தரி சேயர்நன்குடி லேசர்மின்மொழி வேலர்தண்கதி
ராபுரந்தனில் வாழவே கூவாய் குயிலே 53

ஆயிரங்கலை யாயுமண்டல் வேதபண்டித ராயவந்தணர்
தேரும் விஞ்சையின் மீறவே கூவாய் குயிலே 54

அரந்தோயு மயில்விழிகொள் சிவன்பாதி யுமைபுதல்வ
னயன்பேணுபரமனென்று கூவாய் குயிலே 55

இரங்காழி புடைவளையும் நிலங்கீறி யுழுதசம
ரினங்கேழல் மருகனென்று கூவாய் குயிலே 56

உரந்தரவு தசமகுட தரன்சாய விசையினெறிந்
துகந்தாடு பெரியனென்று கூவாய் குயிலே 57

பரங்காண நொடியில்வினை தவிர்ந்தோட வுலவுமொரு
பரஞ்சோதி யிறைவனென்று கூவாய் குயிலே 58

வரிசை வளர் திரிபதகை மரபினுரி யவர்கிளைகண்
மதிசெல்வ மேறவே கூவாய் குயிலே 59

பரிசகல கலைநிபுண னதிபரத விததுரிய
பரிநகுல னிவனென்று கூவாய் குயிலே 60

விரியமுத முறுமகுட மருவுமணி முகுடமுலை
மின்னார் விகாரனென்று கூவாய் குயிலே 61

தரியலர்கண் மௌலிகுனி விசயரகு நாயகன்
சகமதனில் வாழவே கூவாய் குயிலே 62

## கழிக்கரைப் புலம்பல்

விரைமலர் மேலறு காலிசை கானிசை மேவுபறாளையில் வாழ்
வரை கிழி வேலவ னினிய சகோதர மதகய மாமுகனார்
கரையொலி வார்கட லேதிரை யேசுற வேகழி யேகயலே
யுரைமது நீண்மழை யேமய லோபெரி தோதரி தோதரிதே. 63

## மழை கேட்டல்

### கொச்சகம்

இருநிலத்து வேதியரும் ஏருழுவே ளாளர்களும்
பரிவினுடன் கடல்வருண பகவானைக் கண்டிறைஞ்சி
விரிதிரைநீர் வளம்பெருக மேவுமுயிர் பயிர்தழையத்
தருமமொடு தரைவிளங்கத் தந்தருளீர் மழையையென்றார் 65

என்பன சொற் செவிப்புகுத இயல்வருண னேது சொல்வான்,
பொன்பயிலுஞ் சீவனுமம் புவிமகனும் வக்கரித்தார்
வன்படைவாள் வலியுசுர மந்திரியுந் தெற்கடைந்தான்
நன்பயன்மா மழைகேட்டீர் நாமினியெவ் வாறளிப்போம் 66

ஆனாலு மோர்மதியிங் கறைந்திடுவ னீர்கேண்மின்
தேனாரு மலர்ச்சோலை செழித்தசுழி புரநகரிற்
கானார்மும் மதமழைபெய் கணபதியைக் கைதொழுதால்
வானாரு மழைபொழிய வரந்தருமென் றனுப்பினனே 67

எண்ணி விடை கொண்டருளு மிருபிறப்பா ளரைமுதலோர்
திண்ணமென நினைந்துக்கொண்டு திருவாய்த்த சுழிபுரத்தில்
அண்ணல்பரஞ் சோதிவிநா யகனைவலம் வந்திறைஞ்சிப்
புண்ணியரே யாங்களுய்யப் புனன்மழைநீர் தருதிரென்றார் 68

செப்புமொழி தனிவினவிச் செம்பவள மணிமேனிக்
கைப்பனையைங் கரஞானக் களிறுசுழி புரநகர்வாழ்
மைப்பணிகங் கணம்பூண்ட பரஞ்சோதி யருட்கடவுள்
மைப்பருவ முகின்மாரி வழங்கமனத் திரங்கியதே 69

### சந்த விருத்தம்

செருகிய தவளக் கணமுகி றமரத்
திரைகடல் சுழியப் புனல்பருகா
பொருசிலை பயிலச் சிறைவிசை யுவணப்
புனை தூள வரியொத் தொளிகருநா

தருமொலி குமுறச் சுழிபுர நகரிற்
சகமகிழ் வரதக் கணபதியோர்
இருநுத லணிபட் டமதென மின்னி
யெழுந்திசை யெங்கணு மண்டியதே. 70

கருமயி லாடக் குயிலினம் வாடக்
கவியினமோடக் கரடிபுல்வாய்
பொருபுலி யாளித் திரள்மரை சாரற்
புறமுழை பதறிக் கிடுகிடவே
யருகுழை தவளக் குலமலை தகரத்
தடதிகி ரியின்முத் துதிர்தரவே
சொரிமல ரகிலப் பலமர முறியச்
சோவென மாரி பொழிந்ததுவே 71

வெருண்டு விரியுடல் சுருண்டு துயில்புரி
விடங்கொ ளுரகமு நடுங்கவே
உருண்டு நிலமிசை புரண்டு நடைமலை
யுடைந்து விதலையொ டொடுங்கவே
மருண்டு குழியத ரிடங்கள் நெளிதர
வரம்பில் வனசரர் கலங்கவே
இருண்டு புவிமயில் கிழிந்து விடநிரை
யெழுந்து கனமழை பொழிந்ததே. 72

பணபதி சிரமிசை நிலவிய புகழ்பொலி
படிமக ளுதவிய திருமருமான்
மணமலி குவளைய மலர்செறி தொடையணி
வடகுவ டனபுய வலிமையினான்
இணரவிழ் சிகழிகை வனிதையர் தினமட
லெழுதிய தனுமத னனையனையான்
குணதர வரரகு நாயக மகிபதி
கொடையென மாரி பொழிந்ததுவே. 73

ஆற்றுவரத்து

பொருவில் கோணச் சிகரத் தருகிற்
பொழிந்த வெள்ளம் வழிந்துபோய்ப்
பூந்தண் குறிஞ்சி வளைந்து வேடிச்சி
காந்தன் சேவடி வணங்கியே

குருளை கோளரி வேழக் களபம்
குருட்டு மாசுண முருட்டியே
குறவர் குடிலுஞ் சிலையு மிதனுங்
கொண்டு பாலை யடைந்துமேற்
பருதி நயனச் சூலக் காளி
பாதம் பணிந்து கழுகுடன்

பருந்து நடுங்கக் குரவின் வேரைப்
பறித்து முல்லை யடைந்துபூந்
திருவின் கொழுநன் சரணம் வணங்கித்
தேங்கு மாயர் பாடியைத்
தேடி வெண்டயிர்ச் சாடி சாடிச்
சிறந்த மருதம் புகுந்ததே. 74

வாய்ந்த மருத நிலத்திற் புகுந்து
வயங்கு கண்சதம் பத்தினான்
வயிரம் பிடித்த வெள்ளை வாரணன்
வனசத் தாளை வணங்கியே
சேந்த பதுமங் குவளை களைந்து
தேக்கிக் காஞ்சியைத் தாக்கியே
செந்நெற் குலமும் வெண்ணெற் குலமுஞ்
சேர்த்து நெய்த னிலத்திற்போய்
ஆய்ந்த வருணன் சரணம் வணங்கி
யடம்பங் கொடியைப் பிடுங்கியே
அடிகோண் முண்டகந் தடவு சுடலை
யடையப் பறித்துப் பவளமுந்
தோய்ந்த நித்திலக் குவையும் வாரிச்
சுறவுக் குலங்கள் பதறவே
சுழித்துக் திரட்டி வெருட்டி யுருட்டித்
துள்ளி வெள்ளம் பரந்ததே. 75

குறவை வாளை யுளுவை மயிந்தன்
குப்புளாவுடன் திருக்கைமீன்
கொழுத்த மடவை தொகுத்த கீளி
குமிளா மாசினி செங்கண்ணன்
உறுகி ழாத்தி காலை பாலை
யோங்கு திரளி வச்சிர
முடகத்துடன் குடை செப்பலி
யுற்ற நெடுவா லூடகம்
பறவை யுறவி குளக்கன் றோகைப்
பருந்து வாயன் மட்டிமீன்

பாரக் கெண்டை தடியன் சீலா
பாரக் கத்தலை யாரல்மீன்
கறுவிக் கரையில் வழைக ளொதுக்கிக்
கதித்துக் குதித்துப் பாயவே
கங்கை யாறு பெருகி வார
காட்சி பாரும் பள்ளீரே. 76

தாவு கெளிறு வாரா லாரல்
தகுவெள் ளாரல் தும்பையன்
சாலு மாம்பழக் கெளிறு சின்னத்
தரளங் கறுத்த கெளிற்றுமீன்
வாவு கருங்கண் வாளை பவள
வாளை மூக்கன் வாளைகோ
வஞ்சி கடியன் பொதியன் கெளிறு
வவ்வால் வெள்ளை வவ்வால்மீன்
ஒவி னெடிய வாயன் மடவை
யுரிய மணலைக் கூரலோ
டோடும் பூனைக்கண் கெளிறு வயலி
னுதிக்குங் காணி யாளனும்
பூவிற் றடத்தில் வயலிற் பாய
புறத்துப் பாயப் பாயவே
பொருது மாவ லிகங்கை வார
புதுமை பாரும் பள்ளீரே. 77

திருக்கை புலியன் றிருக்கை யாரற்
றிருக்கை கள்ளத் திருக்கைமீன்
சிவந்த திருக்கை சட்டித் தலையன்
சீறுந் திருக்கை வெட்டியான்
தருக்குங் குறிஞ்சித் திருக்கை கருமை
தயங்கி றாலொடு வெள்ளிறால்
தண்டைச் சுறவு மொய்ம்மு ரல்கிளை
தக்கன் பாரைக் கல்லிறால்
உருக்க முடைய கெண்டைக்கார
லூர்த்த வெள்ளை வாற் றிருக்கைமீன்
ஓலை வாலன் கருங்கண் ணாளன்
ஊரிற் பெரிய மீனெலாம்
வருக்க முடைய பூக ராசியின்
மடைத் தலை தத்திப் பாயவே
மாவலி கங்கை பெருகி வார
வளமை பாரும் பள்ளீரே 78

## புகழ்தல்
### விருத்தம்

பஞ்சவர்தா துரைத்தவன்பொன் னாலை வாழும்
பவளவாய் முகில்மருகன் பனைக்கை நால்வாய்க்
குஞ்சரமா முகப்பெருமான் தென்பறாளைக்
கோடொன்றான் மணிவரைப்பூங் கொம்ப னாரே
நஞ்சுபழ கியவுமது கண்கள்வேலோ
நகைவதனங் குளிர்மதியோ நகைத்தண் கோதை
அஞ்சனவார் குழல்பருவ மஞ்சோ வேலை
யம்பவள மோகினவா யதரந் தானே 78

## பண்ணைககாரன் தோற்றம்

### சிந்து

மாறுகண்ணுஞ் சோகிப் பாகிற் பல்லி னழகுஞ் - சுத்த
மாவளந்த நாழிபோலே வாயி னழகுஞ்
சீறுசளி யாற்பெருத்த துள்ளு நாசியும் - கொட்டை
திரித்த பருத்தியின்பைக் கூறை வயிறுங்
கீறிவேறு தசையொட்டி வைத்தி டுகாதுஞ் - சற்றே
கிடுகுகட்டிப் பெற்றமுட்டிக் காலுமாகவே
ஆறுமுகவேலர் துணை யார்வ டிவமோர் - பதி
னாறனார்பண் சேரும்பண்ணைக் காரனார் வந்தார் 80

காதளவு சென்றவிழிக் கஞ்சனந் தீட்டி - மலர்க்
காந்தளங்கை யாடகம்பொற் சூடகஞ் சூட்டித்
தாதளவு கோதைக்கு மென் கண்ணியுஞ் சூட்டி - முலைத்
சந்தனச்சே றாட்டிநறுங் குங்குமங் கோட்டிச்
சோதிமணி நீலமயில் போலியல் காட்டி - மரைச்
சுந்தரச்சீ றடியிற்செம் பஞ்சுவைத் தூட்டி
ஆதிபரஞ் சோதிநாத வேத கீதனார் - பண்ணை
யாண்டவரைக் கண்டுதொழ வாரும் பள்ளீரே 81

## ஆண்டையை வணங்கல்

குட்டச் சொறி மேனியாரே கும்பிடுகின்றேன் - உப்புக்
கொட்டுப்போல் வயிற்ற னாரே கும்பிடுகின்றேன்
சட்டிவைத்த முகத்தனாரே கும்பிடுகின்றேன் - தூங்கற்
சண்டைக்கடா வழக னாரே கும்பிடுகின்றேன்

கட்டைமுளிக் காதனாரே கும்பிடுகின்றேன் - மதிக்
காத்திகைமாங் காய னாரே கும்பிடுகின்றேன்
அட்டைவா யுதட்டனாரே கும்பிடுகின்றேன் - பண்ணை
யாண்டவரே யாண்டவரே கும்பிடுகின்றேன். 82

பார்மதிக்க வருஞ்சோழ மண்டலப்
பள்ளி பள்ளனை யுள்ளாக்கி வைத்தபின்
ஊர்மதிக்கு நிகர்வத னாம்புயத்
தொருத்தி முத்தவளாலே யுணர்ந்துமின்
கார்மதித்த குழலினை யாடன்மேற்
கண்சிவந்து கறுத்தாண்டை சீறவே
பார்மதிக்கும் வயற்செய்கை பார்த்துடன்
வருதல் போற்பள்ளன் வருகின் றானே. 83

## விதை வகை கேட்டல்

### சிந்து

பொருப்பி னெல்விதைக் கோட்டையி னீட்டிய
பூட்டு நாணுகத் தீட்டமுஞ் சிந்தை
விருப்பு மேழிக் கலப்பை வகையும் மண்
வெட்டியும் சேர்ணக் கொழுவின் வகையும்
கருப்ப வேலிப் பறாளையில் வாழுமுக்
கண்ணனார் பண்ணை மாட்டின் வகையும்
இருப்பும் போன செலவுநன் றாய்க்கணக்
கேற்றிச்சொல் லீழ மண்டலப் பள்ளா 84

சிந்து ரத்துணை புள்ளு ரயன்பணி
தென்ப றாளைப் பரஞ்சோதி நாத
தந்தி யேறிய வாகனந் தின்று
சமைந்த நெற்கோட்டை யாயிரங் காணுங்
வந்த பாவலர் வெங்கலி தீர
வழங்குங் கோட்டையோ ரைந்நூறு காணும்
இந்த நாளினி லென்பொரு ளாய்வைத்
திருந்த தோர்வட்டுக் கோட்டையொன்றாண்டே 85

தெற்றிக் காளை கழுத்தால் நெரிக்கச்
சிதைந்து போன நுகமொரு கோடி
சுற்றிப் பூணுங் கயிற்றா லழுந்தத்
துளைப றிந்த திருநூறு கோடி
இற்றை நாணுக மொன்றையும் காண்கில
னேழு நான்கிலொன் றில்லாத நாளில்
மற்றப் பாம்புக்கும் பூரத்துக்கும் பகல்
வைத்த நாணுக மொன்றுண்டே யாண்டே 86

கத்தி வேலம்பு வில்லுடன் தெண்டையங்
கட்டு வாங்கங் கருந்தா துலக்கை
பைத்த பாம்புவன் பாசந் திரிசூலம்
பரித்த வீரப் பரஞ்சோதி மூர்த்தி
முத்து நெல்வய லோரந் திருத்த
முறிந்த தையிரண் டாயிரங் காணும்
வைத்த மண்வெட்டி யொன்றுவைத் தேன்மன
மஞ்சிப் பார்க்கின்றேன் காண்கில னாண்டே. 87

அக்க மாலை கமண்டலம் புத்தக
மாடல் வெங்கதை யேந்திய மேலோர்
திக்கெலாம் புகழ் வீசுஞ் சுழிபுரத்
தென்ப றாளை ஈசுர விநாயகர்
தக்க பண்ணை யுழுதிடத் தேய்ந்தன
சாற்றில் மட்டிலக் கேயில்லை யானால்
மிக்க வீர ரகுநா யகன் கொடி
மேழி யொன்றுண்டு காட்டுவே னாண்டே. 88

வன்னச் சோதிநீ லோற்பா மோர்கதிர்
மாதுளம் பூ மணிவீணை தாங்குந்
தன்னைத் தானனை யான்தென் பறாளையிற்
றம்பி ரான்றன் வயலுழு காளை
பின்னர்ச் சாலினிற் சங்கினிற் றட்டப்
பிளந்து போன கலப்பை யனந்தங்
கன்னத் தோர்குண் டலப்பல தேவன்
கரத்தி லேயோர் கலப்பையுண் டாண்டே 89

வேணிக் கங்கையர் காதலர் வாலுளை
வெண்சிங் காசன மேறிய போதர்
சேணிற் கண்விஞ் சையர்பணிந் தேத்திய
தென்ப றாளை ஈசுரர் நாட்டில்

ஆணிப் பொற்கொழு வெல்லாம் நிலம்பட்
டழிந்து கூர்மை யகன்றத னேகம்
மாணிக் கஞ்சொன்ன கோவையி லேகொழு
வைத்திருப்பது பார்மின்கா ணாண்டே 90

செழுநி லாமதிக் கண்ணிச் சடாடவித்
தேவ னாருக் கொருகாளை போச்சு
வழுவில் கோடி யுருத்திரர் ரென்றுளர்
வாங்கி னாரந்த மாட்டறி யேனான்
பழுதில்லா நாரை யொன்று குளந்தத்தப்
பாய்ந்து போகிய தாலிந்தப் பூமி
உழுத காளையொன் றுண்டது பொன்னாலை
யூரிலே வாருங் காட்டுவே ணாண்டே. 91

## கொச்சகம்

சிந்தைமதிக் கெட்டான் செழித்தபண்ணை யாண்டவனுக்
கிந்தவகை பள்ளனியம்பு மொழியைக் கேட்டு
வந்தகுல மூத்தாள் வறிதுநகை யுந்தோற்ற
முந்துகுடும் பன்சரிதை மூதலிக்கத் தொடங்கினளே.

## முறைப்பாடு

### சிந்து

பண்பு நீதி யறியாத தூக்குணிப்
பள்ளன் செய்கரு மங்களைக் கேளும்
உண்ப தூங்குடிப் புங்களின் புங்கண்
ணுறக்க மும்மினை யாள்குடி லோடே
எண்பொ ருந்துமென் புத்தியுங் கேளான்
யானும் பின்னை யுரைப்பதும் விட்டேன்
பெண்பி றந்தது நான்மட்டு மோவிந்தப்
பேச்சை யார்க்கினி விள்ளுவே ணாண்டே 93

கட்டு நீர்வயற் செய்கையுந் தீண்டான்
கலகப் பள்ளி மயல்வலைப் பூண்டான்
பட்டியின் மாட்டைக் கிட்டியும் பாரான்
பழைய தாரமென் றென்னையுஞ் சேரான்
சட்டைக் காரியை விட்டுப் பிரியான்
சற்றே பிரிந்தாலும் மிங்குத் தரியான்
பெட்டிச் சோற்றுக்குங் கள்ளுக்கும் நெல்லெல்லாம்
பெட்டியா லள்ளிக் கொட்டினா னாண்டே. 94

தூர திட்டியன் னான்பண்ணை பாரச்
சுமையெண் ணானிரைத் தூண்டிலிட் டார்க்குப்
பாரமெல்லா மிகப்பிற்கண் ணாமிந்தப்
பள்ள னுக்குக்கண் பள்ளத்தி மேலே
தார மென்றென் கழுத்தின் முன் னாளிற்
சரடு கட்டிய பாரதம் வைத்தோன்
ஆர வாரஞ்செய் கோட்டுக்கும் பாட்டுக்கும்
ஆட்டுக் குஞ்சமத் தாயின னாண்டே 95

மஞ்சொத்த குழலா - ளிளையவள் - குஞ்சுக்கு முதலா - நெல்லு
மணிவிற்றுத் தட்டான் - கையிற் - பணிசெய்வித்திட்டான்
வஞ்சகத்துக் குரியா - கற்ற - விஞ்சைக்குப் பெரியா - ளிட்ட
மருந்துக்குவிருந்தா - கிக்கொண்டிருந்துட்கிக்கரைந்தான்
கஞ்சிக்குப் பிறகே - நின்றுநெஞ்சிக்கொண்டிருப்பா - னவள்
காலையும் பிடிப்பா - னவள் சொன்னால் - நாகமும் பிடிப்பான்
பிஞ்சுற்ற மதிநே - ரொற்றைக் கொம்பத்த கரியா - யெட்டிப்
பிடியுங்கைச் சவுக்காற - கட்டியடிமின்கானாண்டே. 96

ஒச்சடியடித்தா - லென்ன - பேச்சிவன் குடும்பன் - இந்த
வூருக்கு மிணங்கான் - தலையாரிக்கும் வணங்கான்
பூச்சிய முறையன் - பேச்சுழு படைச்சால் - வழி
புரிவளைக் குலஞ்சேர் - சுழிபுரநகர்ப்பெருமான்
ஆச்சியங் கவர்ந்தான் - எதிர்வரு -பேச்சிகொங்கையின் - பாலுண்ட
வரிக்கொரு மருகன் பண்ணை நிலைத்திட வேண்டிற்
காய்ச்சுலை யடுத்தே - யறத் - தோச்சிடு மிரும்பாற் - பண்ணிக்
சுடுவிலங் கிடவே - யினித் தடைசெய்யீ ராண்டே 97

பள்ளனிரு காலி னுக்கு விலங்குபூணப்
பண்ணுவித்தா னென்றிளைய பள்ளி காணா
வெள்ளளவு மிரக்கமென்ப திலையோ வாண்டைக்
கென்னபழி யென்றிரங்கிக் குழைந்து போனாள்
கள்ளவழி யாலீழப் பள்ளிபோந்து
கள்ளும்நல்ல கொழுத்தமறிக் கறியுங் கூட்டித்
துள்ளியுள்ள அகந்தையினாற் காலிற்பூண்ட
தொடுவிலங்குப் பள்ளனுக்குச் சோறிட் டாளே 98

## பள்ளன் மூத்த பள்ளியை வேண்டல்

பட்ட நெஞ்சி லடாதன செய்தார்
படாத தெல்லாம் படுவார்க ளென்கை
கெட்டி யாயறிந் தேனினி நீயிட்ட
கீற்றை யுங்கட வேனொருக் காலுந்
தொட்ட கோபந் தவிர்கணக் காம்படி
சொல்லுவே னுங்க ளாண்டைக்குச் சொல்லித்
தட்டு காற்றாளை நீக்குவித் தேயென்னைத்
தாங்கிக் கொள்ளீழ மண்டலப் பள்ளீ 99

## மூத்த பள்ளி ஆண்டையை வேண்டல்

கண்ணி லேகரந் தீண்டிவிட் டாலந்தக்
கைவி ரல்தறிப் பார்களு முண்டோ
வண்ண மானு முலைவிழுந் தாலவ்
வயிறு தாங்கக் கடனல்ல வோதான்
அண்ணல் வாரி யுலகத்தி லேயடி
யாத மாடு படியாதென்கை
திண்ணந் திண்ணஞ் சிறியோர் செயும்பிழை
சீரி யோர்பொறுக் கக்கட னாண்டே. 100

ஒறுத்த தாற்பய னென் பொறுத் தாருக்
குலக முள்ள வும்புக ழென்றெ
மறுத்த விர்ந்திடு வள்ளுவ னார்சொன்ன
மான வெள்ளைக் குறளறி யீரோ
வெறுக்கை போது மினியெளி யான் பிழையான்
மேன்மை யாக்கணக் கொப்புத் தருவான்
செறுத்த காவலில் வைத்திடு பள்ளனைச்
சேர்த்த காற்றளை மாற்றுவீ ராண்டே 101

## விருத்தம்

ஊசல்வட முர்சகட முழன்றிடும்
பரம்பேய்த்தே ரொத்த வாழ்விற்
பாசமிகு மறலிதனக் கீடாக
வருந்தல்பா ராத தேதோ
வீசுகதிர்ச் சலஞ்சலங்கண் முத்தநிலா
வொளியெறிப்ப வேரி யேறி
வாசமிகு குவளைமலர் சுழிபுரத்தா
லயத்தனொற்றை மருப்பி னானே. 102

## பள்ளன் ஆண்டைக்குக் கணக்கொப்பித்தல்
## சிந்து

குட்டைநாம்பன் வெள்ளிக்கண்ணன் குறுங்கழுத்தன்
கூழைவாலன் வெடிவாலன் வட்டச்செவியன்
மொட்டைத் தலை மோழைக்காளை புள்ளிக்கறுப்பன்
முறிகொம்பன் தறிகொம்பன் சுத்தக்கறுப்பன்
பட்டிக்காளை குன்றுமணிக் கண்ணன் மயிலை
பால்வெள்ளை நாரைக்காளை காற்சிலம்பன்
துட்டக்கள்ளன் வளைகொம்ப னொற்றைக் கொம்பனார்பண்ணை
சூழ்ந்த பல மாட்டின்வகை சொல்லினே னாண்டே 103

மாட்டுவகை யும்பவளத் தாலுழக் கோலும்
பரிமளச்சந் தனமரத்தாற் செய்பட வாளும்
நாட்டுமணி மேழியுங்கை வச்ர நுகமுஞ்சுட்ட
நல்ல பொன்னினாலே சமைத்த கொழு வகையும்
சேட்டினம் பருதியின்ப்ர காச முடையார் தூய
தென்பறாளை யன்பர் நண்பர் செய்யுமருளாளர்
தோட்டுமலர்ப் பொன்னிதழிச் சூட்டர் பண்ணைக்கே வெள்ளிச்
சோதிநாஞ்சி லின்வகைகள் சொல்லினே னாண்டே 104

பார்புகழுங் குண்டைச்சம்பா விஞ்சருச் சனம்பஞ்ச
பாலைபசுங் கர்ப்பூர வாடைக் கறுப்பன்
சேருமணல் வாரிகுள வாழை கறுப்பன்
சின்னட்டிபொன் னாயகன்சொற் காடைக்கறுப்பன்
சீரழ கியவாணன் மங்கா மைக்காத்தான்
செம்பவளச் சம்பாமுத்து மாலைக் குறுவை
வார்க்கருப்பஞ் சாற்றினாற்றல் வீற்றிருப்ப தோர்பண்ணை
வைத்துக்கட்டு வித்துவகை செப்பினே னாண்டே 105

## தலைவன் பொருள் வயிற் பிரிந்துழித் தலைவி வருத்தம் பாங்கி கூறல்

### கட்டளைக் கலித்துறை.

சங்கத்தை யேந்தும் பரஞ்சோதி நாதர் சயிலமின்னார்
புங்கத்தை வாய்ந்த மணிநீலப் பார்வை பொலியுமுத்து
மங்கத்தி லேற்றிடு தங்கத்திற் பீருமுண்டா யிருக்க
வங்கத்தி லேறித் தனந்தேடப் போனவர் வந்திலரே. 106

## முகூர்த்தம் கேட்டல்

செம்பருதி வாரமதிற் பூரணை யென்றார்
தேட்கடையென்றார் சித்த யோகமு மென்றார்
கும்ப முகூர்த்தமென்றார் செம்போ னோரையென்றார்
குஞ்சரக் கரணமென்றார் கூடிப் பெரியோர்
நம்பு கலப்பைச்சக்கரம் நன்றாய்ப் பொருந்துமென்றார்
நாயக ரெமைப்புரக்கு நாதனார் நாட்டில்
வம்பவிழ்பூம் பண்ணையி லேர்ப்பூட்டி யுழவே
நன்மனத் துடனேபோதி யீழமண் டலத்துப்பள்ளா 107

ஊற்று தேன்பொழில் சூழ்தென் பறாளை
யுகந்த ஞானப் பரஞ்சோதி தன்னைப்
போற்றிக் கொள்ளறி யாமற்பொன் னேரினைப்
பூட்டிச் சால்விட் டுழுகின்ற நேரந்
தோற்று மேற்றுக் குறுங்கண்ணன் வாளைமீன்
துள்ளிப் பாய நுகத்தை முறித்துச்
சீற்றக் காளை வெருண்டுகொம் பாற்குத்தச்
சேற்றிற் பள்ளன் விழுந்தான்கா ணாண்டே. 108

பள்ளன்பண்ணை மீது விழவே - முத்த
பள்ளி பரிதவித்து முகத்திலறைந்து
துள்ளிவிழி நீர்சொரியவே - யழுதழுது
சோதிமுலைப் பந்தி லடித்துக்
கள்ளவிழ்பூங் கோதைகுலைய விழுந்தெழுந்து
கனன்மெழுகி னுருகி யிளைய
குள்ளிமருந் திட்டின் மயக்கோ - நாச்சிமார்தங்
குறையொவென் றழுதிரங்கினாள். 109

தேன் கிடந்த தொடையானே தேடரிதாங் கண்மணியே
வான் கிடந்த புகழானே மலைகிடந்த தோளானே
யூன் கிடந்த மெய்தளர்ந்தே யோவியம்போல் வயலனையில்
ஏன் கிடந்தா யென்னகுறை யின்னதென்று சொல்லாயே. 110

கண்ணுதற் கண்ணனருள் காரியைய னார்குறையோ
விண்ணினிடி மின்னாமல் வீழ்ந்ததையா வென்புகல்வேன்
நுண்ணறிவு முயிர்ப்புமின்றி யொடுக்கமுட னீகிடந்தாற்
பண்ணைவகை தமைப் போந்து பார்ப்பவரார் காப்பவரார். 111

கொங்கை யுரந்தடியாக் குழன்முடியாத் காலத்தே
மங்கலநா ணெனக்கணிந்து வரைந்ததுவு மறந்தனையோ
பங்கவயற் செய்கைசெய்யப் பரஞ்சோதி காக்குமென்று
செங்கையினீர் தெளித்திடவே தெளிந்து பள்ளனெழுந்தனனே 112

சுத்தர்பணிந் தேத்துஞ் சுழிபுரத்து வீற்றிருக்கும்
அத்த பரஞ்சோதி யண்ணலே - கைத்தலத்துச்
சூலந் திரிந்துமுனந் தோன்றால காலமெனக்
காலன் வரும்போது கா.

உழுது பரம்படித்தேன் சாலி விதையை
உண்மைபொலி நன்முகூர்த்தந் தன்னில் விதைத்தேன்
அளவாய் முளைத்தபின்பு நீரைப் பாய்ச்சினே
னம்புயனும் மாதவனும் போற்றித் துதிக்கும்
மழகளி றானபரஞ் சோதிப் பெருமான்
வழங்கு கருணையின் வளர்ந்த நாற்றைத்
தொழுது நடும்வடிவு காண வாரும்
சொல்லவந்தேன் காணும்பண்ணைக் கார னாண்டே. 114

காமன் மகிழ் மைத்துனனார் பொன்னாலைப்
பதியிலுறை காயா மேனி
மாமன் மகிழ் மருமகனார் சுழிபுரம் வாழ்
பரஞ்சோதி வரதர் நாட்டிற்
பூமகள்கேள் வனையனைய காளையுடன்
தழல்வடவை பொங்கு கானிற்
சேமநிதி மங்கலமான் சீறடிவைத்
தெவ்வாறு செல்கின் றாளே. 115

## நாற்று நடவு

திங்க ளாடப் பணியுமாடத்
திருச்ச டாடவி யாடவே
செறிந்த கனகக் கடுக்கை யாடச்
சிந்து ரத்துரி யாடவே
அங்கை மான்புழு வாட வம்புலி
யரவ மாட மன்றினில்
ஆடி னாரவர் சேய்பறாளை
யமர்பரஞ் சோதி வயலுளே
கொங்கை யாட மகரக் குழையுங்
கொப்பு மாடச் சுரும்பினக்
கோவை யாடக் கோதையாடக்
கோலமுத் தார மாடவே

சங்க மாடச் சரிக ளாடத்
தனத்திற் கச்சசைந் தாடவே
தயங்கு நாற்றை யொருவர்க் கொருவர்
தள்ளி நடவாரும் பள்ளீரே. 116

சின்னி வன்னி நாகி யேகி
திருவி யுருவி குருவியுஞ்
சேவி யாவி பூவி யேவி
செல்லி தன்னுடன் வல்லியும்
பொன்னி கன்னி வேலி பாலி
புழுகி சிவப்பி கறுப்பியும்
புலிச்சி கலிச்சி வீரி சூரி
பூமி யுடனே சோமியும்
பன்னு சுருதி முனிவர்க் குரிய
பரன் பறாளைப் பதியில்வாழ்
பவள மேனியன் வயலில் நாற்றைப்
பாடி நட வாரும் பள்ளீரே. 117

மருதி டைத்தவழ் பசிய வித்தக
மரகதப் புயல் மருகனார்
வலவை பக்கதலி லுறைய முத்தம
மதக யத்திரு வதனனார்
சொருகு கொத்தல ரளக முக்கணி
யுமைய ளித்திடு புதல்வனார்
சுழிபுர ரப்பதி யால யப்பரஞ்
சோதி நாயகர் வயலுளே
யிருவி ழிக்கயல் சுறவு கிட்டுற
விரலணி த்தொகை பிறழவே
யிடத்திற் தொடுத்து முடித்த நாற்றை
யெடுத்து நாங்க ணடச்செய்தோம்
வெருவி முட்பொதி பலவி னிற்கனி
சிதற லான்மிகத் திருக்குடன்
விழுந்து மீன்கள் குதித்துப் பாயும்
விதத்தைப் பாரும் பள்ளீரே. 118

தண்ணெனன் தொடைய விதழிப் புங்கவன்
தந்த கூரொற்றைக் கொம்பனார்
தாரணிப் புவன பூரணப் பரம
காரணப் பொருளு மாயினார்
வண்ணஞ் சிவந்த புரத்தினார் தொந்தி
வயிற்றின் முப்புரி நூலினார்

மஞ்சு சூழ் பொலிற் தென்பறாளையில்
வாழ்பரஞ் சோதி வயலுளே
பண்ணி னிசைந்த சொல்லி லேநுதல்
வில்லி லேயிணை வில்லிலே முலை
பல்லிலேமுலை வல்லி லேயரைப்
பணத்தி லேமஞ்சள் மணக்கிலே
கண்ணி லஞ்சனந் தீட்டி லேநுதற்
சூட்டி லேகுழைத் தோட்டிலேகுழற்
காட்டி லேயிசைப் பாட்டிலேதலை
யாட்டி றானடி பள்ளீரே. 119

தேடிப் பொருளைப் புதைத்துக் கொழித்துக்
தெளித்துக் குழைத்து வடித்தநூல்
தெள்ளு நாவ ருள்ள மேலுறை
தேவனார்திரி கோவனார்
வாடிச் சிறுகு மிடைப்பு லோமசை
மகிழ்நன் பூசித்த வரதனார்
மண்டலம் புகழ் தென்பறாளை
வாழ் பரஞ் சோதி வயலுளே
கோடி வளைந்த கரும்பு ரூரங்
குனிக்கு மிந்திர சாபமாக்
கொடிம ருங்குன்மின் னாக வேநுதல்
குழவிப் பிறையி னிலங்கவே
யாடிச் சரிந்த கோதை மேகங்க
ளாகத் தரளக் கோவையை
யாலிக் குலமென்று பீலிக் குலமயி
லாலிப் பதைப்பாரும் பள்ளீரே. 120

நாளுங் கலியைத் துரப்பதே யன்றி
நாளை வாவென் றுரைத்திடான்
நம்பினோர் ர்க்கருள் தருத யாபரன்
வெம்பி னோர்க்கரி யேறனான்
வாளின் றடக்கைச் சந்திர சேகர
மானா முதலி வாழவே
வரந்தந்துதவு தென்ப றாளை
வாழ்பரஞ் சோதி வயலுளே
தாளிற் பதும ராகச் சுவடு
தயங்கு சுப்பிரம் பதியவே
சருவிச் சருவியொருவர்க்கொருவர்
தயங்கு நாற்று நடுகைக்கே

மீளத் திரும்பிப் பள்ளனைப் பார்த்து
        வெண்ணகைத் தரளங் காட்டவே
வெருவிப் பங்கயங் குவியக் காவிகள்
        வெடிப்பதைப் பாரும் பள்ளீரே 121

அத்தி மணிச்சுடி கைத்துயி லிற்பயில்
        பச்சை முகிற்கொரு மருகனா
ரத்தி முகத்தவர் நித்தர் விழித்திரி
        யற்புத வித்தகர் வயலுளே
முத்து முலைச்சிய ரக்கு வலைச்சிய
        ரற்ற விடைச்சியர் நடுகைக்கே
முத்தை யனத்திரண் முட்டை யெனச்சிறை
        கட்டி யணைக்குது பள்ளீரே. 122

வடிக்குஞ் சகல கலைகள் போற்றும்
        வள்ள லைங்கர னாட்டிலே
தெரிக்குங் கழனிப் பயிர்கள் வளர்ந்து
        செறிந்த விளைந்து சரிந்தவே. 123

தேன்பயி லுந்தடஞ் சோலைப்பெருந்
        தென்பறாளையி னாதன்றிகழ்
வான்செறி யும்பண்ணை மீதேகதிர்
        வாய்க்குங்குலைச் செந்நெறானே
கூன்பிறை நேரிரும் பாலே மள்ளர்
        கொய்து செய்தே வைக்கும் வேலைக்
கான்செறி தாமரைப் பூமே லன்னங்
        கண்டுயில் பாரும் பள்ளீரே. 124

தேன்பயி லுந்தடஞ் சோலைப்பெருந்
        தென்பறாளையி னாதன்றிகழ்
வான்செறி யும்பண்ணை மீதேகர்
        வாய்க்குங்குலைச் செந்நெறானே
கூன்பிறை நேரிரும் பாலே மள்ளர்
        கொய்து செய்தே வைக்கும் வேலைக்
கான்செறி தாமரைப் பூமே லன்னங்
        கண்டுயில் பாரும் பள்ளீரே. 125

கொந்தவிழ் தாமப் பொற்றொடை யான்மத
        குஞ்சர வானனமுடையா னனு சூலன்
றிரி சூலன் றரு பாலன் புனை நூலன்
        கந்தனை வாய்த்திடு துணையா னன்பர்.

கருத்திலேயன் றினையான் றழை காதன் றெய்வ
நாதன் சிவபோதன் றிருநாட்டில்
செந்துவர்க் காய்க்குலை கனத்தேய் வயற்
செந்நெற் குழாங் குயத்தாலே யரிதீரம்
மரி தீரம் மரி தீரம் மெனு நேரம்
வெந்திறல் வேலை யடர்த் தேவரி
மேவு கயற்கண்ணியாரே வாழை மேற்றிண்
குலைத் தாற்றின் கவி யேற்றந் தனைப் பாரீர் 125

வீறுயர் பாரதக் கதை நூல லம்பொன்
மேருவிற் றீட்டிய பெருமான் றிரை
யாறணி சேகரன் மருமா னானை
மாமுகன் தன்றிரு நாட்டிற்

காறகை யாவெழு சாலிப் பசுங்
காயடி யோதையைக் கண்டே வயற்
சேறளை மீன்குதித் தறுமீன் மட்டுஞ்
சேர்வது பாரும் பள்ளீரே. 126

சோதியாகும் பரராசசேகரன் தன் குலத்
துதித்து நித்தம் பாரோர் பரவி ஏற்றிடும்
நீதிமன்னர் புகழ அமரர் தொழ
நின்ற கதிர்காம சேகரக் கோனும் 127

நீர் பொருந்திய நிறையொடு நல்
நீதி மேவிய நித்திய கல்யாணன்
நீர் பொருந்திய அமரர் தொழு தனிப்புலி
சிங்க முதலி யென்னும் வேரும் 128

திருவுலா புயத்தினன் வீரங் கொள்
தெரியல் சேருஞ் செழுமணி மார்பன்
தரும சீலன் சுப்பிரமணிய பிள்ளைத்
தண்டிகைச் சத்துருக் குல சேகரனும் 129

துதிக்கு எண்பது தேசமெல்லாம் புகழ்
தூயன் ஊர ரசர் நாளும்
மதிக்கும் வள்ளல் தேவர் தொழநின்ற
மாபிரபு சின்னத்தம்பியா ரெனும் பூபதியோனும் 130

கதிக்கும் பைந்தமிழ் பாவலரைத் தினங்
காத்தவன் கலி தீர்த்தவன் இரு
நிதிக்கு பேரன்நிகர் செல்வன் காவலர்தொழ
நின்ற குலசேகர பூபதி தானும் 131

எண்டிசையும் புகழ் மணக்கும் ஏந்தல்
எம்கலியினை ஓட்டும் எங்கள் ஆண்டே
தண்டிகை குலசேகர பூபதியென்றே சொல்லும்
திருச்சேரீழ மண்டலப் பள்ளிநானே. 132

# உசாத்துணை நூல்கள் முதலியன


1. ஆலயவழக்கு - 1884, 1889, 1917, 1995
2. மயிலப்பர் ஆசாரி ஆலய கட்டிடஒப்பந்தவழக்கு - 1905
3. பறாளை விநாயகர் ஆலய அறக்கட்டளை - 1909
4. யாழ்ப்பாண வைபவ கௌமுதி - 1918
5. பறாளை விநாயகர் பள்ளு - 1932 பதிப்பு
6. இலங்கையின் நூறு தமிழ் பெரியார்கள்
7. வலி-மேற்கு பொருட்காட்சி மலர் - 1976
8. சித்தவைத்திய பரம்பரை - 1985
9. குலசேகரம் - 1985
10. பறாளை விநாயகர் சித்திரதேர் - 1985
11. பிரபு பெரியபரிகாரியார் சரித்திர ஆராய்ச்சி- 1987
12. ஈசுர விநாயகர் திருக்கோவில் வரலாறு - 1994

உதயன் பதிப்பகம் - திருக்கோணமலை
☏ 026-20783